Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :182 வைகாசி 16ஆம் நாள் வெள்ளிக்கிழமை 29 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051

கொரோனாவிலிருந்து எம்மை நாமே பாதுகாப்போம்



13

வீட்டில் சமைத்த உணவை உண்பதே சிறந்தது உணவகங்களில் உணவினைப் பெற்றுக்கொள்ளும் பொழுது இயலுமான வரை உணவுகளைப் பொதி செய்து பெற்றுக் கொள்ளுவோம்.

தகவல்: வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம்

## மீண்டும் ஊரடங்கு

யாழ்ப்பாணம், மே 29
எதிர்வரும் மே 31 ஞாயிற்றுக்கிழமை, ஜூன் 4 வியாழக் கிழமை மற்றும் ஜூன் 5 வெள்ளிக்கிழமைகளில் நாடு முழுவதும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.
எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 02

# சஜித் - ரணில் அணிகள்; மோதல் உச்சக்கட்டம்!

### ஏட்டிக்குப் போட்டியாக இரு அணிகளும் கூட்டம்

கொழும்பு, மே 29
ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்றுவெள்ளிக்கிழமை கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் கூடவுள்ளது. இதற்குப் போட்டியாக சஜித் அணியினரும் இன்று அவசர கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர். 02

## விபத்தில் தாய் உயிரிழப்பு மகள் படுகாயம்

கிளிநொச்சி, மே 29
கிளிநொச்சியில் மோட்டார் சைக்கிளோடு டிப்பர் மோதுண்டதில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்தார். அவரது மகள் படுகாயமடைந்தார். இந்த விபத்து நேற்றுக் காலை 10.30 மணிளவில் பரந்தன் பூநகரி வீதியில் நடந்துள்ளது. பூநகரியிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளை, கிளி 10

### முதலாம் திகதியிலிருந்து

## மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் இயங்கும்

### திங்களன்று சந்தைகள் திறப்பு

யாழ்ப்பாணம், மே 29
ஜூன் முதலாம் திகதியிலிருந்து யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகங்கள் என்பன முழுமையாக இயங்கவுள்ளன. அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் நேற்றுத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: 02

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

## திங்களன்று போராட்டம்!

வவுனியா, மே 29
எதிர்வரும் திங்கட் கிழமை பெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக வவுனியாவில் கடந்த 1,196 நாட்களாக போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தலைவி கா.ஜெயவனிதா தெரிவித்தார்.
வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு 02

## மீண்டும் வடக்கில் பொதுச்சேவை ஆணைக்குழு

யாழ்ப்பாணம், மே 29
வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவனால் இடை நிறுத்தப்பட்ட வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவுக்கு மீண்டும் அதே உறுப்பினர்கள் புதிய ஆளுநர் திருமதி சாள்ஸால் நியமிக்கப்பட்டுள்ளனர்.
வடக்கு 02

## கொரோனா 1,530

கொழும்பு, மே 29
இலங்கையில்கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி நேற்று 40 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதையடுத்துப் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 10

## கூட்டமைப்பு தலைவர்கள் நேற்று ஒன்றுகூடிப் பேச்சு

### இன்று மாலையும் சந்திப்பு

கொழும்பு, மே 29
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் நேற்று மாலை கொழும்பில் சந்திப்பு நடைபெற்றது.
சம்பந்தனின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட்டின் தலைவர் தர்ம 02

### தேர்தலைப் பிற்போட

## தேர்தல்கள் ஆணைக்குழுவும் மனுதாரர்களும் கூட்டுச் சதி

### நீதிமன்றில் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 29
பொதுத் தேர்தலை ஜூன் 20ஆம் திகதி நடத்த எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தையும் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்த தீர்மானத்தையும் வலுவிழக்கச் செய்யக் கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய் 02

### வடமராட்சி குண்டுவெடிப்பு

## துன்னாலையை சேர்ந்தவர் ரி.ஐ.டியால் நேற்றுக் கைது!

வடமராட்சி, மே 29
வடமராட்சி கிழக்கு வல்லிபுரப் பகுதியில் பொலிஸாரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் 02

## தமிழ்த் தலைவர்கள் மனம் மாற வேண்டும்!

### தனிநாடு சாத்தியமில்லை என்கிறார் மஹிந்த

கொழும்பு, மே 29
'வடக்கு, கிழக்குப் பகுதிகளை தனி நாடாக்க வேண்டும் என்ற சிந்தனையின் மூலம் இந்த நாட்டில் தமிழ் அரசியல் நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்துகின்றது. இது நடைமுறை சாத்தியக் கோரிக்கையல்ல. இலங்கையைப் பிரித்து தனிநாடு என்பது சாத்தியமானது அல்ல. தமிழ் அரசியல்வாதிகள் களயதார்த்தத்தைப் புரிந்து கொண்டு 10

## ஆறுமுகனின் இறுதிக்கிரியைக்கு ஊரடங்கு தடையில்லை!

### பிரதமர் மஹிந்த தகவல்



யாழ்ப்பாணம், மே 29
நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நாடளாவிய ரீதியில் ஊரடங்கு நடைமுறையில் இருந்தாலும் ஆறுமுகம் தொண்டமானின் இறுதிக் கிரியைக்கு அது தாக்கத்தை ஏற்படுத்தாதென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பு மின்னிதழ் ஊடகத்துக்கு அவர் மேலும் தெரி 10

# சனிக்கிழமைகளிலும் வாகனவரி அனுமதி!

யாழ்ப்பாணம், மே 29

எதிர்வரும் 30ஆம் திகதி மற்றும் ஜூன் 6ஆம் திகதி ஆகிய சனிக்கிழமைகளில் வாகன வரி அனுமதிப் பத்திரத்தை சில பிரதேச செயலகங்களின் ஊடாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூர், தென்மராட்சி, கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பளை, கரவெட்டி, பருத்தித்துறை, கரைதுறைப்பற்று, கரைச்சி, வவுனியா நகர் மற்றும் மன்னார் நகர் ஆகிய பிரதேச செயலகங்களில் காலை 9 மணிமுதல் நண்பகல் 12.30 மணி வரை வாகனவரி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மீண்டும்...

முழு நாளும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும். ஜூன் முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் ஜூன் மூன்றாம் திகதி புதன்கிழமை வரை அனைத்து மாவட்டங்களிலும் ஊரடங்கு முன்னர் போன்று இரவு 10 மணி தொடக்கம் அதிகாலை 4 மணி வரை நடைமுறைப்படுத்தப்படும்.

ஜூன் 4ஆம் திகதி வியாழன் மற்றும் ஜூன் 5ஆம் திகதி வெள்ளி ஆகிய இரு தினங்களும் நாடு முழுவதிலும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும். ஜூன் 6ஆம் திகதி சனி முதல் அனைத்து மாவட்டங்களிலும் மறு அறிவித்தல் வரை ஊரடங்கு சட்டம் முன்னர் போன்று இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும்.

கொழும்பு மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்கு அனுமதியளிக்கப்படும். இதேவேளை எதிர்வரும் 5ஆம் திகதி பொசன் போயா விடுமுறை தினம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## சஜித்...

சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ள தமது கட்சி அங்கத்தவர்களின் உறுப்புரிமையை நீக்குவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது. இதற்கு அனுமதி பெறுவதற்காகவும், செயற்குழுவில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவது சம்பந்தமாகவும் ஆராய்வதற்காகவே அவசரமாக மத்திய குழு கூடுகின்றது எனவும், பொதுத்தேர்தல் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படவுள்ளது எனவும் சிறிகொத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் இன்று விசேட சந்திப்பொன்றை ஏற்பாடு செய்துள்ளது. கட்சி யாப்பைமீறும் வகையில் செயற்பட்டமை குறித்து தன்னிலை விளக்கம்கோரி ஐக்கிய தேசியக்கட்சியால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதம், வேட்புமனு தாக்கலுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு, தேர்தல் உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது. ஐ.தே.க பிளவடைந்த பின்னர் நடைபெறும் இன்றைய இரு வேறு சந்திப்புக்கள் அரசியல் அரங்கைப் பரபரப்பாக்கியுள்ளன. இந்தக் கூட்டங்களின் முடிவில் முக்கியமான சில முடிவுகள் இரு தரப்பில் இருந்தும் வெளியிடப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ம-44)

## மீண்டும் வடக்கில்...

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவில் 5 பேர் அங்கம் வகித்தனர். அவர்கள் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைத்ததாகத் தெரிவித்து 2019ஆம் ஆண்டு மே மாதம் அப்போதைய ஆளுநர் சுரேன் ராகவன் ஆணைக்குழுவைக் கலைத்தார்.

குழுவின் தலைவரான பத்மநாதன், மற்றும் உறுப்பினர்களான இராசையா, இராசநாயகம் ஆகியோரால் ஆணைக் குழு ஒன்றைக் கலைப்பதற்குரிய முறைமை பின்பற்றப்படவில்லை என்று தெரிவித்து 2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஐந்து அங்கத்தவர்களில் இருவர் தாமாகவே விலகிக் கொண்டனர். இந்த வழக்கைத் தாக்கல் செய்த மூவரும், வழக்கை கடந்த பெப்ரவரி மாதம் மீளப் பெற்றுக் கொண்டுள்ளனர். இதனையடுத்து அவர்கள் மூவரும் தற்போதைய ஆளுநரால் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ,5,105)

## திங்களன்று...

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி மைத்திரியின் நூறு நாள் வேலைத்திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றில் எனது மகளான ஜெரோமி உட்பட நான்குபேர் உள்ளனர். இன்று எனது மகளின் பிறந்ததினம் ஒவ்வொரு பிறந்தநாளிலும் எனது பிள்ளை என்னிடம் வரும் என்று எண்ணி தெரு ஓரத்தில் இருந்து கண்ணீர்விட்டுக் கொண்டிருக்கிறேன். அந்த கண்ணீர் 11 வருடங்களாக நீண்டுசெல்கின்றது. எமது வேதனையை தீர்ப்பதற்கு யாரும் முன்வரவில்லை. அனைவரது வாக்குறுதிகளும் எமக்கு ஏமாற்றமாகவே போய்விட்டன. எனது பிள்ளை என்னிடம் வரும் வரைக்கும் இந்த போராட்டத்தை தொடர்ந்து கொண்டே இருப்பேன். அத்துடன் எமது போராட்டம் எதிர்வரும் திங்கள்கிழமை 1200ஆவது நாளை எட்டுகின்றது. இதை முன்னிட்டு மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம் -என்றார். (ம-110)

## தேர்தல்கள்...

துள்ள மனுதாரர்களும், தேர்தல்கள் ஆணைக் குழுவும் ஒன்றாக இணைந்து பொதுத் தேர்தலை பிற்போட முயல்கின்றனரா என்று எண்ணத் தோன்றியுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டி சில்வா உயர்நீதிமன்றில் சுட்டிக்காட்டினார். தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் சார்பில் மன்றில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களும் மனுதாரர் தரப்பின் வாதங்களும் இவ்வெண்ணத்தை தோற்றுவிப்பதாக அவர் வாதிட்டார்.

ஜூன் 20ஆம் திகதி நடாத்த எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தையும், ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்த தீர்மானத்தையும் வலுவிழக்கச் செய்யக் கோரி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 7 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான பரிசீலனைகள் நேற்று 7ஆவது நாளாகவும் இடம்பெற்றது. மன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 13 இடையீட்டு மனுக்கள் தொடர்பிலும் இடையீட்டு மனுதாரர்களுக்கு வாதங்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

முதலில் பேராசிரியர் பண்டுல எந்தகம முன்வைத்த இடையீட்டு மனு சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டி சில்வா வாதிட்டார்.

'நாடாளுமன்றத்தைக் கலைத்து 3 மாதங்களுக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்று எந்த சட்ட வியாக்கியானங்களும் இல்லை. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்ட அரசமைப்பில் எந்த இடமும் இல்லை. தேர்தல்கள் தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்க எந்தத் தடையும் இல்லை என்று முதல் நாளன்றே உயர் நீதிமன்றம் தெரிவித்தது. எனினும் தேர்தல்கள் குறித்து திகதியை தீர்மானிக்கவும் விருப்பு இலக்கங்களை வழங்கவும் தேர்தல்கள் ஆணைக் குழு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதிலிருந்து மனுதாரர்களும் தேர்தல்கள் ஆணைக் குழுவும் ஒன்றிணைந்து பொதுத் தேர்தலை பிற்போட முயல்கின்றனரா என எண்ணத் தோன்றுகின்றது' என்று வாதிட்டார்.

இதனையடுத்து சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி யின் செயலர் சட்டத்தரணி சாகர காரியவசத்தினுடைய இடையீட்டு மனு சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேதாச ராஜபக் ஷ உயர் நீதிமன்றில் விடயங்களை தெளிவுபடுத்தினார். அரசமைப்பையும் தேர்தல் சட்டங்களையும் தேர்தல் ஆணைக்குழு மீறியுள்ளதாக அறிவித்து பொருத்தமான உத்தரவை பிறப்பிக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ச தனது வாதத்தின் போது கூறினார். தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் சமூக பொறுப்பை கவனத்திற்கொள்ளாமல், நீதிமன்றத்தில் எதிர்மறையான கருத்துக்களைக் முன்வைக்கின்றனர். நியாயமான பக்கசார்பற்ற தேர்தலொன்று உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதற்காக தேர்தல் ஆணைக்குழு நிறுவப்பட்டாலும் அதன் உறுப்பினர்களுக்கு இடையில் தற்போது ஏற்பட்டுள்ள முரண்பாடான நிலைமையால் நீதிமன்றுக்கு வந்து எதிர்மறையான கருத்துக்களை அவர்கள் கூறுகின்றனர். இது வெட்கப்பட வேண்டிய நிலைமை. ஆணைக்குழுவின் சில உறுப்பினர்கள் தமது பொறுப்பை உணர்ந்துகொள்ளாமல் இருக்கின்றனர்' என்று வாதிட்டார்.

இதேவேளை, சிவில் செயற்பாட்டாளர் ஜீவன் தியாகராஜாவின் இடையீட்டு மனு சார்பாக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி உதித்த இஹலஹேவா, நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் கீழ் விதிமுறைகளை விடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளதென சுட்டிக்காட்டினார். அதன் பிரகாரம், நாடாளுமன்றத்தைக் கூட்டி தேர்தல் தொடர்பாக புதிய சட்டத்தை இயற்றும் தேவை இல்லை என்று அவர் வாதிட்டார். (ம-ஒ,5)

## துன்னாலையை...

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று இரவு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

துன்னாலை குடவத்தை பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவரே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் மற்றொருவரைத் தேடிச்சென்ற நிலையில் அவருடன் தொடர்புடையவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னரே சந்தேகநபரின் கைது தொடர்பில் தகவல்களை வழங்க முடியும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொழும்பில் இருந்து வருகைதந்த ரி.ஐ.டியே இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. குறித்த குண்டுவெடிப்புடன் தொடர்புடையவரான முதலாவது நபர் பொலிஸார் மீது மிளகாய் தாக்குதல் மேற்கொண்டவர் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. அவர் தொடர்ந்தும் தலைமறைவாகியுள்ள நிலையில், இரண்டாவது சந்தேகநபர் தான் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-20)

## மாவட்ட...

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பொதுச் சந்தைகளைத் திறப்பது தொடர்பில் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுடன் கடந்த வாரம் கலந்துரையாடல் நடத்தியிருந்தோம். சந்தைகளைத் திறப்பதிலுள்ள சவால்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டிருந்தது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து சந்தைகளைத் திறப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டது. பொலிஸார், பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஒத்துழைப்பு இதற்காகப் பெற்றுக் கொடுக்கப்படும்.

திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும். காலை 6 மணி தொடக்கம் 12 மணி வரை அந்தப் பகுதியை ஒரு வழியாக்குவதற்கும் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம்.

**புயல் நிவாரணம்**

அம்பான் சூறாவளி காரணமாக அதிகரித்த வேகத்தில் காற்று வீசியது. இதன் காரணமாக கடந்த 21ஆம் திகதி மற்றும் அதற்கு பிற்பாடும் அதிகரித்த காற்றுக் காரணமாக சுமார் 130 குடும்பங்கள் தங்களுடைய வீடுகள் முழுமையாக அல்லது பகுதியளவில் சேதமடைந்திருப்பதாக அறிவித்திருந்தார்கள். அவர்களுடைய விவரங்கள் பெறப்பட்டு அவர்களுக்கு முற்பணமாக பத்தாயிரம் ரூபா வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது. 7 குடும்பங்களைத் தவிர ஏனையோருக்கு பத்தாயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது, என்றார். (ஒ,5)

## கூட்டமைப்பு...

லிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது சமகால விவகாரங்கள் தொடர்பில் பேசப்பட்டன என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா நேற்றிரவு தெரிவித்தார்.

'அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் கூட்டமைப்பினர் நடத்திய சந்திப்பில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, விவசாயக் காணிகள் விடுவிப்பு தொடர்பில் அவர் வாக்குறுதிகளை வழங்கினார். எனினும், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பில் முன்னேற்றகரமான செயற்பாடுகள் எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. தமிழ் அரசியல் கைதிகளின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியலை மட்டும் பிரதமர் வாங்கி வைத்துள்ளார். இந்தநிலையில், கொரோனா அபாயத்தையடுத்து தமது விடுதலையை வலியுறுத்தி சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதிக்கு கடிதமும் அனுப்பியுள்ளனர். இவை தொடர்பில் இன்று (நேற்று) கலந்துரையாடினோம். நாடாளுமன்றத் தேர்தலுக்கான கூட்டமைப்பின் அறிக்கையைத் தயாரிப்பது தொடர்பிலும் பேசினோம்' என்று மாவை சேனாதிராசா மேலும் கூறினார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின் ஆயுதப் போராட்ட எதிர்ப்புணர்வு கருத்துக்கள் தொடர்பிலும் ஒருகட்டத்தில் பேசினோம். எனினும், இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூடி ஆராயும் எனத் தீர்மானிக்கப்பட்டது. கூட்டமைப்பின் தலைவருடனான எமது சந்திப்பு நாளை (இன்று) மாலையும் நடைபெறும்' என்று மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்தார். (ம-22)

### கொரோனாவின் பின்னர்

## பாலர் பாடசாலைகளில் கடைப்பிடிக்க வேண்டியவை

கொழும்பு, மே 29

கொரோனா அபாயத்தின் பின்னர் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் படிப்படியாக மீட்டெடுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக, பாலர் பாடசாலைகள் மற்றும் குழந்தைகளின் பகல் நேர பராமரிப்பு மையங்களில் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிகாட்டுதல்களை, சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

அந்த வழிகாட்டியில் உள்ளதாவது;

இவற்றை மீள இயக்க வைக்கும்போது, இந்த நடைமுறைகள் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். வளாகத்தின் நுழைவாயிலில் கைகழுவும் வசதி கட்டாயமாக ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அங்கு பணியாற்றுபவர்கள் அனைவரும் கட்டாயமாக முகக்கவசம் அணிந்திருக்கவேண்டும். எனினும், குழந்தைகளுக்கு முகக்கவசம் அணிய ஊக்குவிக்கக்கூடாது. சுவாசப் பாதை நோய் ஆபத்து உள்ள இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகள், முகக்கவசம் அணிவது ஆபத்தானது. ஆயினும், 3 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு முகக்கவசம் பற்றிய கருத்தை அறிமுகப்படுத்துவது நல்லது. வைரஸ் தொற்று ஏற்படக்கூடிய குழு நடவடிக்கைகள், விழாக்கள், சிறப்பு நிகழ்வுகளை இரத்து செய்ய, அல்லது ஒத்திவைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒரு குழந்தை நோய் வாய்ப்பட்டால் தனிமைப்படுத்தக்கூடிய அறை அல்லது இடத்தை தயார் செய்ய வேண்டும் என குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. பராமரிப்பு மையங்களில் குழந்தைகளின் மெத்தைகள் ஒன்றுக்கொன்று எதிராக வைக்கப்படக்கூடாது. குழந்தைகள் விளையாடும் பொம்மைகள், விளையாட்டு உபகரணங்கள் கிருமி நீக்கம் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பாலர் பாடசாலை மற்றும் குழந்தைகள் தின பராமரிப்பு மையமும், சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவதை உறுதிசெய்ய அறிக்கை தயாரித்து, சுகாதார மருத்துவ அதிகாரியிடமும், குறிப்பிடப்படும் பிறிதொரு உள்ளூர் அதிகார நிர்வாகத்திடமும் வழங்க வேண்டும். இந்த மையங்களுக்கு பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர் அவதானம் செலுத்த வேண்டிய விடயங்களாக, இலகுவாகக் கழுவக்கூடிய ஆடைகளை மட்டும் குழந்தைகளுக்கு அணிய வேண்டும். அவசியமற்ற ஆபரணங்கள், ரிபன்கள் குழந்தைகளுக்கு அணியக்கூடாது. கிருமிநாசினி அல்லது சோப் பாவித்து குழந்தைகளின் புத்தகப்பை மற்றும் உபகரணங்களை கிருமி நீக்கம் செய்ய வேண்டும் - என்றுள்ளது. (ப)

# 38,000க்கும் அதிகமானோர் இலங்கை திரும்ப முயற்சி

### வெளிவிவகார அமைச்சு தகவல்

**கொழும்பு, மே 29**

**கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் இருக்கும் 38 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் மீண்டும் நாட்டுக்குவர முயற்சிப்பதாக வெளிவிவகார அமைச்சு அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது.**

வெளிவிவகார அமைச்சு அமைச்சரவைக்கு அறிவித்துள்ள விசேட அறிக்கை ஒன்றிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக 143 நாடுகளில் இருக்கும் 38 ஆயிரத்து 983 இலங்கையர்கள் மீண்டும் நாட்டுக்குவர முயற்சிக்கின்றனர். இவர்களில் 27ஆயிரத்து 845பேர் அந்த நாடுகளில் இருக்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களாவர். அத்துடன் 3 ஆயிரத்து 527மாணவர்கள், குறுகியகாலவிசா பெற்றுக்கொண்ட 4 ஆயிரத்து 40 பேர், சார்புடையவர்கள் 3 ஆயிரத்து 527 பேர், இரட்டை பிரஜா உரிமை பெற்றவர்கள் 480 பேரும் இவர்களில் அடங்குகின்றனர். மேலும் கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியில் இருந்து கடந்த வாரம் வரைக்கும் வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையர்கள் 3 ஆயிரத்து 938 பேர் 15 நாடுகளில் இருந்து நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர். அவ்வாறு அழைத்துவரப்பட்டவர்களில் அதிகமானவர்கள் மாணவர்களும் பயிற்சிகளுக்குச் சென்றிருந்த அரச அதிகாரிகள் மற்றும் அவர்களின் சார்புடையவர்களாவர். சீனாவின் வூஹான் நகரத்தில் இருந்து அழைத்துவரப்பட்ட 33 மாணவர்கள் மற்றும் இந்தியாவுக்கு யாத்திரைக்காகச் சென்றிருந்து அழைத்துவரப்பட்ட 839 பேரும் இதில் உள்வாங்கப்படவில்லை. மேலும் இவர்கள் மீண்டும் நாட்டுக்கு வருவதால், அவர்களின் தொழில் மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கு நீண்டகாலத்துக்கு ஏற்படக்கூடிய அழுத்தங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துமாறு வெளிநாட்டில் இருக்கும் தொழிலாளர்களிடம், மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களிடம் கேட்டிருக்கின்றோம். இதேவேளை, மருத்துவ உதவி தேவைப்படுபவர்கள் மற்றும் அனுதாப காரணங்களின் அடிப்படையில் இவர்களின் ஒரு பகுதியினரை அழைத்துவர ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம் - என்றுள்ளது. (ப)

## வாகன விபத்தில் இளைஞன் காயம்

சாவகச்சேரி, மே 29

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் அம்புலன்ஸ் வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை கைதடிப் பகுதியில் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்திலிருந்து அவசர நோயாளர்களுடன் அம்புலன்ஸ் வண்டி கொழும்பு நோக்கி வந்துள்ளது. அவ்வேளையில், வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அம்புலன்ஸ் வண்டியுடன் மோதியுள்ளது. அங்கு நின்றவர்கள் காயமடைந்தவரை ஏற்றிவிட சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைத்துவிட்டு அம்புலன்ஸ் கொழும்பு சென்றுள்ளது. காயமடைந்த நுணாவில் மேற்கைச் சேர்ந்த 28 வயது நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)

## சிம் விற்பனையாளர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர்

### தனிமைப்படுத்தல் முகாமுக்குச் சென்று வந்ததால்

கொழும்பு, மே 29

கிண்ணியா சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் சிம் அட்டை வியாபார முகவர்களின் இரு குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார மருத்துவ அதிகாரி ஏ.எம்.ஏ.அஜித் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிண்ணியா பைசல் நகர் மற்றும் ரஹ்மானியா நகர் ஆகிய இரு கிராமஅலுவலர்பிரிவுகளில்உள்ள இரு குடும்பங்களே இவ்வாறு சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளரின் உத்தரவுக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இரு சிம் அட்டை வியாபார் முகவர்களும் திருகோணமலை குரங்குப் பாலம் இராணுவப் படைத்தளத்தில் உள்ள கொரோனா தனிமைப்படுத்தல் முகாமில் உள்ளவர்களுக்கு கடந்த 2020.05.20ஆம் திகதி சிம் அட்டைகளை விற்பனை செய்யச் சென்றவர்கள். அந்த முகாமில் குவைத், கட்டார் போன்ற நாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்றார்கள். இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டிருப்பவர்களின் குருதி மாதிரிகள் கொரோனாப் பரிசோதனை செய்யப்பட்ட போது, இவர்களில் சிலருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு தொற்றுக்கு இலக்கானவர்கள் தாம் தொடர்புபட்டவர்கள் குறித்து வழங்கிய தகவலை அடுத்து இந்த சிம் அட்டை முகவர்கள் இருவரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரோடு, மேலும் திருகோணமலை, கந்தளாய் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவருமாக மொத்தம் 4 முகவர்கள் வியாபார நோக்கமாக இந்த தனிமைப்படுத்தல் முகாமுக்குச் சென்று வந்திருக்கிறார்கள் என்ற தகவலும் கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு கிடைத்துள்ளது. இதேவேளை, றஹ்மானியா பிரதேசத்திலுள்ள சிம் அட்டை முகவரின் வீட்டுக்குச் சென்று வந்த அதே பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரையும் அவரது வீட்டில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியிருக்கிறோம். கடந்த 20ஆம் திகதியில் இருந்து இந்த இருவரும் சென்று வந்த இடங்கள், அவர்கள் தொடர்பு கொண்ட நபர்கள் குறித்து முழுமையான தகவல்களைப் பெறுவதற்காக பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். இதற்காக சுகாதாரப் பிரிவினர், பொலிஸார், பொதுமக்கள் என பல்வேறு பிரிவினர்களின் ஒத்துழைப்பையும் கோரியிருக்கின்றோம் - என்றார். (ப)



## வீட்டுத் தோட்டத்துக்கான நாற்று, விதை கையளிப்பு

தென்மராட்சி, மே 29

தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தால் வீட்டுத் தோட்டத்துக்கான நாற்றுகள் மற்றும் விதைகள் என்பன பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

மீசாலை புத்தூர்ச்சந்தி கமநல நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் இவை வழங்கப்பட்டன. வீட்டுத்தோட்டத்தில் ஆர்வமுள்ள தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு கத்தரி, மிளகாய், தக்காளி ஆகிய நாற்றுக்கள் பொதிகளாகவும் வெண்டி விதையாகவும் வழங்கப்பட்டன.

தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தின் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தகுதி வாய்ந்த அதிகாரியுமான பேராசிரியர் க.கந்தசாமி இதனை வழங்கினார். ஆயிரத்து 500 விதை நாற்றுக்கள் சாவகச்சேரி மற்றும் கைதடி கமநல சேவை நிலையங்களினூடாக நூறு குடும்பங்களுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-159)

# இனவாத ஆக்கிரமிப்பை சட்டரீதியாக்கவே செயலணி

## கோத்தாவின் நோக்கத்தை அம்பலப்படுத்துகிறார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன்



**யாழ்ப்பாணம், மே 29**

**இனவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கவும் அவற்றுக்குச் சட்டபூர்வ அனுமதி வழங்கவுமே ஜனாதிபதி செயலணி நிறுவப்பட்டுள்ளது. அதன் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இராணுவ ரீதியில் அமையும் என்பதை அதன் தலைவராக பாதுகாப்புச் செயலர் நியமிக்கப்பட்டமை தெளிவுபடுத்துகிறது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.**

கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் சின்னங்களை அடையாளப்படுத்த ஜனாதிபதி செயலணி நிறுவப்பட்டுள்ளமை தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மையில் கிழக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்தின பொத்துவில் கடல் விகாரைக்குச் சென்று அதைப் பார்வையிட்டார். அங்கு கருத்து வெளியிட்ட அவர், கடல் விகாரை போன்ற தொல்பொருள் சின்னங்கள் உரிய முறையில் பராமரித்துப் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும், கடல் விகாரை, தீகவாபி விகாரை ஆகியவற்றின் 70 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணிகள் பிறரால் அபகரிக்கப்பட்டிருப்பதாகவும் அவற்றை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார்.

அதையடுத்து தொல்பொருள்சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென மகாநாயக்கர்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதியால் அந்த நோக்கத்தை நிறைவேற்ற உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டுள்ளது. அதன் தலைவராகப் பாதுகாப்புச் செயலர் கமால் குணரத்தின நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒரு நாடோ அல்லது ஒரு இனமோ தமது பாரம்பரியங்களையும் வரலாற்று ஆதாரங்களையும் கட்டிக்காக்க தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாப்பது முக்கியமான தேவையாகும். இலங்கையைத் தாயகமாகக் கொண்ட சிங்களவர்களோ, தமிழர்களோ, முஸ்லிம்களோ தமது தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாப்பதும், மேலும் அவற்றை ஆய்வு செய்து வரலாற்று, பண்பாட்டு அம்சங்களை ஆதாரபூர்வமாக இனம்கண்டு கொள்வதும் முக்கிய கடமைகளாகக் கருதப்படுகின்றன.

சிங்கள, பௌத்த தொல்பொருள் சின்னங்களைக் கண்டுபிடிக்கவும் ஆய்வு செய்யவும் ஜனாதிபதி செயலணி நிறுவப்பட்டமையை எவரும் குறைகூறமுடியாது. ஆனால் தொல்பொருள்சின்னங்களைப் பாதுகாப்பது என்ற பெயரில் ஏனைய இனங்களின் தொல்பொருள் சின்னங்களை அழிப்பதும், அவர்களின் தொன்மையையும் வரலாற்றையும் மூடிமறைப்பதும், ஆக்கிரமிப்பதும்,. ஆயுதமாகப் பயன்படுத்தப்படுவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

தீகவாபி மலையில் பௌத்த சின்னங்கள் இருப்பதாகக் கூறப்பட்டு அந்த மலையில் ஒரு விகாரை அமைக்கப்பட்டது. சில காலத்தின் பின் தீகவாபி மலையில் ஒரு மணி அமைக்கப்பட்டு அதன் மணியோசை கேட்கும் பகுதியில் பௌத்தரல்லாத எவரும் குடியிருக்கக் கூடாதென விகாராதிபதியால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அந்தப் பகுதி முஸ்லிம்கள் பரம்பரை பரம்பரையாக வாழும் ஒரு பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அந்த விகாராதிபதி படுகொலை செய்யப்பட்டமை, அதவக்தலாவை பிக்குகள் படுகொலை என்பனவற்றுடன் அந்தப் பிரச்சினை கைவிடப்பட்டது. அண்மையில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான மாணிக்கமலைப் பகுதியில் தீகவாபி யாத்திரிகளுக்கு ஓய்வுமடம் அமைப்பது என்ற பேரில் அந்தப் பகுதியை ஆக்கிரமிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அது நீதிமன்ற உத்தரவின் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டது.

அப்படியான ஆக்கிரமிப்புக்களைத் தொடரவும், சட்டபூர்வமாக உறுதிப்படுத்தவுமே ஜனாதிபதி செயலணி அமைக்கப்படுகிறது என்ற அடிப்படை உண்மை பாதுகாப்புச் செயலர் வெளியிட்ட கருத்தின் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது.

தீகவாபி மட்டுமின்றி பொத்துவில் கடல் விகாரையும் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் இறங்குவதற்கான முன்னறிவித்தலே இது என்று நம்ப வேண்டியுள்ளது. தொல்பொருள் சின்னங்கள் இருப்பதாகக் கூறப்பட்டு இந்துக்களின் வழிபாட்டிடங்கள் ஆக்கிரமிக்கப்படுவதும் தமிழர்கள், முஸ்லிம்களின் காணிகள் அபகரிக்கப்படுவதும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவது புதிய விடயமல்ல.

கன்னியா வெந்நீரூற்று இராவணனால் தனது தாயார் வழிபடுவதற்காக உருவாக்கப்பட்டதாகப் புராண இதிகாசங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் சில வருடங்களுக்கு முன்பு தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு அங்குள்ள பிள்ளையார் கோவில் வளாகத்தில் விகாரை அமைக்க அரச ஆதரவுடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புல்மோட்டையில் தொல்பொருள் சின்னங்கள் காணப்படுவதாகக் கூறப்பட்டு 500 ஏக்கர் முஸ்லிம்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்படுகின்றன. நீராவிப்பிட்டி பிள்ளையார் ஆலய வளாகத்தில் விகாரை அமைக்கப்பட்டதுடன் பிள்ளையார் கோவிலை அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வெடுக்குநாறியிலுள்ள சிவாலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள தொல்பொருள் திணைக்களம் தடை விதித்தள்ளது. குருந்தமலைக்கும் புத்த பிக்குகளும் தொல்பொருள் திணைக்களமும் உரிமை கோரி வருகின்றன.

ஒட்டுமொத்தத்தில் வடக்கு- கிழக்கில் ஏராளமான இடங்களில் தொல்பொருள் சின்னங்கள் இருப்பதாகத் தொல்பொருள் திணைக்களமும், வன பரிபாலத்துக்குச் சொந்தமானவையென வனவளத் திணைக்களமும், தமிழ் மக்களின் வழிபாட்டிடங்களையும் விவசாய நிலையங்களையும் நீர் நிலைகளையும் ஆக்கிரமிக்கும் நோக்குடன் உரிமை கோரி வருகின்றன.

இத்தகைய இனவாத ஆக்கிரமிப்பு உள்நோக்கம் கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கவும் அவற்றுக்குச் சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கவுமே ஜனாதிபதி செயலணி நிறுவப்படுகிறது என்பது புலனாகிறது. மேலும் அதன் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இராணுவ ரீதியில் அமையும் என்பதை அதன் தலைவராகப் பாதுகாப்புச் செயலர் நியமிக்கப்பட்டமை தெளிவுபடுத்துகிறது.

இப்படியான அநீதிகள் மூலம் பாதிக்கப்படும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து தமது பாரம்பரியங்களைச் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க வேண்டும், என்றுள்ளது. (ஒ.5)

# உக்காத கழிவுப் பொருள்கள் அகற்றும் பணி முன்னெடுப்பு

சாவகச்சேரி, மே 29

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் உக்காத கழிவுப் பொருள்கள் அகற்றும் செயற்றிட்டம் கடந்த 22 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகிறது.

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மந்துவில், வரணி, கொடிகாமம் மற்றும் எழுதுமட்டுவாள் ஆகிய சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் உக்காத பொருள்கள் அகற்றுவது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தமது கிராம அலுவலர் பிரிவுகளில் காட்சிப்படுத்தப்பட்ட இடங்களில் உக்காத கழிவுப் பொருள்களை உரப்பைகளில் இட்டு வைக்குமாறு அறிவிக்கப்பட்டது.

ஜூன் முதலாம் திகதி மந்துவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட இராமாவில், மீசாலை வடக்கு, மந்துவில்கிழக்கு, மேற்கு., வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும், இரண்டாம்திகதி வரணி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள குடமியன், நாவற்காடு, வரணி வடக்கு, மாசேரி இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி, வரணி இயற்றாலை பிரிவுகளி லும். 4 ஆம் திகதி கொடிகாமம்பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள அல்லாரை , வெள்ளாம்போக்கட்டி , கச்சாய், பாலாவி , கொடிகாமம் வடக்கு கொடிகாமம் மத்தி ஆகிய பிரிவுகளிலும் 8 ஆம் திகதி எழுதுமட்டுவாள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரி வுக்குட்பட்ட கொடிகாமம் தெற்கு உசன், விடத்தற்பளை, கரம்பகம், கெற்பேலி. எழுதுமட்டுவாள் தெற்கு, எழுதுமட்டுவாள் வடக்கு, மிருசுவில் தெற்கு, மிருசுவில் வடக்கு ஆகிய பிரிவுகளிலும். உக்காத கழிவுப் பொருள்கள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள், தமது கிராம அலுவலர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு கழிவுகள் வைக்கும் இடங்கள் பற்றி அறிந்து கொள்ளுமாறும் அறிவித்துள்ளனர். (ஐ-9)



# கிணற்றிலிருந்து வெடிபொருள்கள்

யாழ்ப்பாணம், மே 29

வலி. வடக்கு குரும்பசிட்டிப் பகுதியில் கிணற்றிலிருந்து பெருமளவு வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கிணற்றை நேற்றுச் சுத்தம் செய்தபோது, அதற்குள் பெருமளவு வெடிபொருள்கள் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விசேட அதிரடி படையினருடன் பொலிஸார் அங்கிருந்த வெடிபொருள்களை மீட்டுள்ளனர். (க-20)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## எல்லாம் ஒரே குட்டை, ஒரே மட்டை!

நாடே கொரோனா அச்சத்தில் இருக்கையில் கோத்தா அரசு, அதைப் பற்றி அக்கறைப்பட டாமல் தேர்தலைப் பற்றியே சிந்திக்கிறது என்பது எதிரணிகளின் பொதுவான குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டில் உண்மை இல்லாமலும் இல்லை. கொரோனா ஒழிப்பு நடவடிக்கை முதல் நிவாரணம் வழங்குவது வரை தேர்தல் ஆதாயத்தை முன்னி றுத்தியே கோத்தாபய அரசு செயற்பட்டது. அதற் குப் பின்னரும் தேர்தலை வைக்க வேண்டும் என்ற ஒற்றைக் காரணத்துக்காகவே கொரோனா அபாயம் முற்றாக நீங்க முன்னர் அவசரத்தனமான இயல்பு நிலைத் தோற்றத்தை ஏற்படுத்த அரசு முனைகின்றது. இதனாலேயே அரசாங்கத்துக்கு மக்களைப் பற்றிக் கிஞ்சித்தும் கவலையில்லை, அதற்கு தேர்தலை நடத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையி னைப் பெறுவது மட்டுமே ஒரே குறிக்கோள் என எதிரணியினர் ஆளாளுக்கு கம்பு சுற்றுகிறார்கள்.

ஆனால் அப்படிக் கம்பு சுற்றுபவர்கள் கூட, அதே தேர்தல் அரசியலை முன்னிறுத்தியே செயற்படு கின்றார்கள் என்பதும், மக்களை விடவும் தமது பதவியும் அரசியல் ஆதாயங்களுமே முக்கியமா னவை என்பதுமே முரண்நகையான விடயங்கள். நாட்டில் பிரதான எதிரணியான ஐ.தே.க இப்போது இரு துண்டங்களாகி விட்டது. ஒரு அணி ரணிலோ டும், மற்றைய அணி சஜித்தோடும் நின்று கொண்டு மல்லுக்கட்டத் தொடங்கியுள்ளன. நாடாளுமன்றத் தேர்தலில் கூட இவ்விரு அணிகளும் எதிரும் புதி ருமாகவே களம்காண, தனித்தனி வேட்புமனுக்க ளைத் தாக்கல் செய்துள்ளன. இருப்பினும் தேர்த லுக்குப் பின்னர் இவ்விரு அணிகளும் ஒன்றுபடச் சந்தர்ப்பம் இருப்பதாகப் பேசப்பட்டது. அவ்வ ளவு ஏன், இப்போது நாடாளுமன்றத் தேர்தல் வர்த் தமானி தொடர்பான வழக்குகளில் மனுதாரர்க ளுக்கு சார்பான தீர்ப்பு வந்து, நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்பட்டு, திரும்பவும் புதிய தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு வேட்புமனுத் தாக்கல் செய் யும் நிலை வந்தால், சஜித், ரணில் அணிகள் ஒன் றுபட்டுப் போட்டியிடும் எனவும், அதற்காகவே இந்த வழக்குகள் என்றும் சொல்லப்பட்டது.

ஆனால் அதையெல்லாம் பொய்யாக்குவது போன்று, ஐக்கிய மக்கள் சக்தியில் சஜித் தலைமை யில் போட்டியிடும் 102 ஐ.தே.க உறுப்பினர்கள் அனைவரையும் கூண்டோடு கட்சியில் இருந்து நீக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. இது சஜித் தரப்பினரை வெகுண்டெழச் செய்து விட, இன்று இரு தரப்பினரும் ஏட்டிக்குப் போட்டியாக கூட்டம் போடும் நிலைமைக்குச் சென்றுவிட்டது. சஜித் தலையெடுத்தால் தன்னுடைய அரசியல் வாழ்வு அஸ்தமித்து விடும் என ரணிலும், இனியும் ரணிலின் கீழ் இருந்தால் தான் தலையே எடுக்கமு டியாது என சஜித்தும் கணித்துக் கொண்டு ஆடும் சதிராட்டத்தாலேயே ஐ.தே.க இப்படி இரண்டாகப் பிளவுற்றுள்ளது. கோத்தாபய மீது சஜித், ரணில் தரப்புகள் சுமத்திய அதே தேர்தல் அரசியலையே, தாமும் கடைப்பிடிப்பதை அறிந்தும் அறியாதவர் களாக இருக்கிறார்கள் போலும். கோத்தாபய, ரணில், சஜித் என எல்லோருமே மக்கள் நலனை விட தங்கள் சொந்த நலனையே எப்போதும் முன் னிறுத்தும் அரசியல்வாதிகள். எல்லோரும் ஒரேகுட் டையில் ஊறிய மட்டைகளே. அத்தோடு ராஜபக் ஷ கனவு கண்டு கொண்டிருக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை, கோத்தாபயவின் கொரோனா கால நகர்வுகள் பெற்றுக் கொடுக்காவிட்டாலும் கூட, அதை ரணில், சஜித் தரப்புகள் தங்கள் உள் வீட்டுச் சண்டையால் கிடைக்கச் செய்துவிடவும் கூடும். எதிர்க்கட்சி இரண்டுபட்டால், ஆட்சியா ளர்களுக்கு கொண்டாட்டம்தானே.

# ஆறுமுகனின் கனவை அரசு நிறைவேற்றும்



கொழும்பு, மே 29


**மலையக மக்கள் தொடர்பில் மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானால் முன்வைக்கப்பட்ட அனைத்து கோரிக்கைகளை யும் அரசு நிச்சயம் நிறைவேற்றும் என்று முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமா னின் பூதவுடலுக்கு நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங் களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மலையக மக்களுக்காக அரசியல் களத்தில் போராடிய இப்படியொரு தலைவரை இனி காணமுடியாது. மரணிக்கும் தருவாயில்கூட மலையக மக்கள் தொடர்பிலேயே கோரிக்கை களை முன்வைத்திருந்தார்.

அந்த மக்களின் கல்வித் தரம் முன்னேற வேண்டும். சம்பளம் கிடைக்கவேண்டும். நுவ ரெலியா மாவட்டத்தில் பல்கலைக்கழகம் உரு வாக்கப்படவேண்டும் என்பன உட்பட பல விட யங்களை நிறைவேற்றவேண்டும் என குறிப்பிட் டிருந்தார்.

எனவே, மலையக மக்களுக்காக தொண்ட மான் கண்ட கனவு நிறைவேற்றப்படும். ஒரு தம்பியாக அதற்கான அழுத்தங்களை நான் பிரயோகிப்பேன் - என்றார். (ஒ.5,44)



## வங்காலையில் 'போயா' இரும்பு

மன்னார்,மே 29

கடலில் பயணத்தை மேற்கொள்ளும் கப்பலுக்குப் பயன்படுத்தும் 'போயா'என அழைக்கப்படும் மிகப் பெரிய இரும்பு மன்னார் வங்காலை கடலில் மீனவர்க ளால் கண்டு பிடிக்கப்பட்டது.

நேற்று வியாழக்கிழமை மதியம் வங்காலை கடற்க ரைக்கு இரும்பு கொண்டு வரப்பட்டுள்ளது.

'போயா'என அழைக்கப்படும் மிகப் பெரிய இரும்பு வங்காலை கடலில் காணப்படுவதை அவதானித்த மீனவர்கள், சக மீனவர்களின் உதவியுடன் படகில் கட்டி இழுத்து வங்காலைக் கடற்கரைக்கு அதனைக் கொண்டு வந்தனர். (க- 56)

## 43 பயணிகள் மத்தளவில் தரையிறக்கம்

பெல்ஜியம், பிரேஸிலிலிருந்து 43 பயணிகளுடன் வருகை தந்த போயிங் 737 விமானம், மத்தள சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுத் தரையிறங்கி யுள்ளது.

காலி துறைமுகத்தில் நங்கூரமிடப்பட் டிருக்கும் கப்பலில் பணியாற்றவுள்ள வர்களே, விமானத்தில் வருகை தந் துள்ளனர்.

வருகை தந்தோர், விமான நிலையத் தில் வைத்து தொற்றுநீக்கம் செய்யப் பட்டதைத் தொடர்ந்து, காலி துறைமு கத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட னர் என்று விமான நிலைய அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கப்பலில் பணியாற்றிய 35 பேர், பெல்ஜியம், பிரேஸிலுக்குப் புறப்படுவதற்காக மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு அழைத்து வரப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (க)

பெண்ணுக்கு பாலியல் தொல்லை

## இளைஞனுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,மே 29

வீதியால் சென்ற பெண்ணுக்கு வார்த்தைகளாலும், சைகைகளாலும் பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞ னுக்கு விளக்கமறியல் உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மடம் வீதியில் நடந்து சென்ற 30 வயது டைய பெண் ஒருவரை வார்த்தைகளாலும், சைகைக ளாலும் பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற் றச்சாட்டில் இளைஞன் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பாதிக்கப்பட்ட பெண் வழங்கிய முறைப்பாட்டின் அடிப் படையிலும், அவரது மைத்துனர் வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையிலும் சந்தேகநபர் கைது செய் யப்பட்டார்.

சந்தேக நபர் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்படுத்தப்பட்டார்.

1993ஆம் ஆண்டு திருத்தப்பட்ட இலங்கை தண்ட னைச் சட்டக்கோவை 345 ஆம் பிரிவின் கீழ் பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் மன் றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.பீற்றர் போல். சந்தேக நபரை இன்று வெள்ளிக்கிழமை வரை விளக்கமறிய லில் வைக்க உத்தரவிட்டார். (க)

## 1,900 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

கொழும்பு,மே 29

ஆறு கோடி ரூபா பெறுமதியான ஆயி ரத்து 900 போதை மாத்திரைகளுடன் களனி பலுகங்க பகுதியில் சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

களனி பிராந்திய குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போது குறித்த சந்தேகந பர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 3 கிராம் 360 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப் பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தே கநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசார ணைகளூடாக பியகமப் பகுதியிலும் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, 3 கிராம் 120 மில்லிகிராம் ஹெரோய்ன் மற்றும் சொகுசு கார் ஒன்றுடன் மற்றொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க)

# கிரவல் அகழ்வால் வவுனியாவில் 320 ஏக்கர் வயல் நிலம் பாதிப்பு

## தடுக்கக் கோரி விவசாயிகள் கடிதம்

வவுனியா,மே.29

**வவுனியா கன்னாட்டி பெரியதம்பனை வீதியில் அமைந்துள்ள கிராம பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கிரவல் அகழ்வுப்பணி காரணமாக 320 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் செட்டிகுளம் பிரதேச சபை தவிசாளர் மற்றும் வெங்கலச்செட்டி குளம் பிரதேச செயலாளர் ஆகியோரிடம் மனு ஒன்றைக் கையளித்தனர்.**



விவசாய நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கிரவல் அகழ்வுப்பணியைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியே அந்த மனு கையளிக்கப்பட்டது.

கடந்த காலங்களிலும், மக்களின் காணிகளில் கிரவல் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு கிராம மக்களின் முயற்சியினால் நிறுத்தப் பட்டிருந்தது. தற்போது மீண்டும் தமது பகுதியில் கிரவல் அகழ்வுப்பணிகள் இடம்பெற்று வருகின்றது என்று மக்கள் சுட்டிக்காட்டினர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மக்கள் ஒன்றிணைந்து குரல்எழுப்பிய போதும் கிரவல் அகழ்வுப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படு கின்றன.

இதனால் இக்கிராமத்தை சூழவுள்ள ஐந்திற்கும் மேற்பட்ட குளங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இதனை நம்பி விவசாயச் செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் தமது நிலங்களில் நெற்செய்கையினை மேற்கொள்ள முடியாது சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இதனால் சுமார் 320 ஏக்கர் வயல் நிலம் பாதிக்கப்பட்டுள்ளது.

மக்களின் வாழ்வாதாரமான விவசாயச் செய்கையை மேற்கொள்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதுடன் கிரவல் அகழ்வுப்பணியைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அந்த மனுவின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், வவுனியா மாவட்டச் செயலர், கனிய வள அமைச்சு, நன்னீர் விவசாய அமைச்சு, கடற்றொழில் நீரியல்வள மற்றும் மூல கங்கள் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, புவிச்சரிதவியல் சுரங்கங்கள் பணியகம் கொழும்பு, வன பரிபாலனத்திணைக்களம், பறயனாளங்குளம் பொலிஸ் நிலையம், கன்னாட்டி கிராம அலுவலகர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. (ப-110)

ருமேனியாவிலுள்ள

# இலங்கை தொழிலாளாளர்கள் 36 பேருக்கு தொழில் வாய்ப்பு

கொழும்பு, மே 29

மே 24ஆம் திகதி ருமேனியாவிலுள்ள புக்கரெஸ்ட் விமான நிலையத்தில் சிக்கித் தவித்த 36 இலங்கைத் தொழிலாளர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புக்களை வழங்கும் முயற்சியில், ருமேனியாவின் தொழிலாளர் அமைச்சர் வயலெட்டா அலெக்ஸாண்ட்ரு தலையீடுகளை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ருமேனியாவின் தொழிலாளர் அமைச்சர் வயலெட்டா அலெக்ஸாண்ட்ரு இலங்கைத் தொழிலாளர்களின் தொழில் வாய்ப்புக்களைப் பாதுகாத்து, தக்கவைத்துக் கொள்வதற்கு ஏற்கனவே ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். தொழிலில் இருந்த பலருக்கு கோவிட்19 தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கைத் தொழிலாளர்கள் தமது தற்போதைய தொழில்களில் இருப்பதற்கு முன்னர் மறுப்புத் தெரிவித்திருந்தனர். ருமேனிய தொழிலாளர் அமைச்சு மற்றும் ஏனைய அமைப்புக்களின் உதவியுடன், ருமேனியாவிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களுக்கு பொருத்தமான தங்குமிட வசதிகள் மற்றும் ஏனைய தேவைகளை வழங்குவதற்கு, ருமேனியாவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வோர்சோவிலுள்ள இலங்கைத் தூதரகம் தொடர்ந்தும் உதவி வருகின்றது. அதற்கமைய, 36 இலங்கைத் தொழிலாளர்களைக் கொண்ட குழுவுக்கு ருமேனியாவில் தொடர்ந்தும் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்காக, வேறு தொழில் தருனர்களை வழங்கியுள்ளதாக ருமேனிய அரசாங்கம் இலங்கைத் தூதரகத்துக்கு தெரிவித்தது. இந்த விடயத்தை இணக்கமான முறையில் தீர்ப்பதற்காக ருமேனிய அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளுக்காக வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தினேஷ் குணவர்தன தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார். (ப)

# யானைகளின் வாழிடங்கள் வரைபடமாக்க வேண்டும்

## கிழக்கு ஆளுநர் வலியுறுத்து

மூதூர்,மே 29

காட்டு யானைகளால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, யானைகளைப் படையெடுக்கும் பிரதேசங்கள் அடையாளம் காணப்படும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு இருக்கிறதா என்று கண்டுபிடிக்குமாறு ஆளுநர் அதிகாரிகளுக்கு உத்தர விட்டுள்ளார்.

விவசாயத்துக்குத் தேவையான நிலங்களை அடையாளம் காண திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கிடையில், யானைகளின் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மக்களிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன.

எதிர்காலத்தில், நாட்டின் பொருளாதாரத்துக்கு விவசாயம் பெரும் பங்களிப்பாக இருக்கும். விவசாய நோக்கங்களுக்காகப் பயிரிடப்படாத நிலங்களை அகற்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் ஆளுநர் அதிகாரிகளுக்குத் தெரிவித்தார். (க-40)

# அஸாத் சாலிக்கு பாதுகாப்பு

## வழங்குமாறு தேசப்பிரிய கடிதம்

கொழும்பு, மே 29

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலிக்குத் தேவையான மெய்ப்பாதுகாப்பு அதிகாரிகளை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நாடாளுமன்றத் தேர்தல் 2020 அரசியல்வாதிகள், முன்னாள் ஆளுநர்களுக்கான மெய்ப் பாதுகாப்பு அதிகாரிகளை நியமித்தல் எனும் தலைப்பில்பதில்பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரத்னவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்

அந்த கடிதத்தில் உள்ளதாவது;

முன்னாள் ஆளுநர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் தலைவராகச் செயற்படும் எம். அஸாத் சாலிக்கு வழங்கப் பட்டிருந்த மெய்ப்பாதுகாப்பு கடந்த 2019.11.30 ஆம் திகதியில் இருந்து நீக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. முன்னாள் ஆளுநர்களுக்கு தற்போதும் மெய்ப் பாதுகாப்பாளர்கள் வழங்கப்படுகின்ற நிலையில், முன்னாள் ஆளுநர், நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய பட்டியல் வேட்பாளரும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் தலைவருமானஎம்.அஸாத் சாலிக்குரிய மெய்ப் பாதுகாப்பாளர்கள் நீக்கியமை உசிதமான காரியமல்ல என தேர்தல்கள் ஆணைக்குழு அவதானித்துள்ளது. அதனால் அவருக்கு மீண்டும் போதுமான மெய்ப் பாதுகாப்பு அதிகாரிகளை வழங்க வேண்டும். அவ்வாறு பாதுகாப்பு வழங்க முடியாது எனின் அது தொடர்பான காரணங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை அனுப்பி தேர்தல்கள் ஆணைக்குழுவை அறிவுறுத்த வேண்டும் என்றுள்ளது. அத்துடன் குறித்த கடிதத்தின் பிரதி ஒன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் எம். அஸாத் சாலிக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ப)

# மாணவர் அனுமதிக்கு படிவம் விநியோகம்

வவுனியா,மே 29

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் 2021ஆம் ஆண்டு தரம் ஒன்று மாணவர்களுக்கான விண்ணப்ப படிவங்கள் இன்று வெள்ளிக்கிழமை முதல் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 8.30 மணியிலிருந்து பாடசாலை பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் நுழைவு இலக்கத்தைப் பெற்று விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நேர ஒதுக்கீட்டைப் பெறுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

அனுமதிக்கான விண்ணப்ப படிவங்கள் ஜூன் முதலாம் திகதி காலை 9 முதல் வழங்கப்படும். கொரோனா நோய் தொற்றுக்கால தனிநபர் இடைவெளியைப் பேணும் முகமாக இந்த நடைமுறையை கைக்கொள்ளுமாறு பெற்றோருக்கு அறிவுறுத்தல் விடுப்பதாக பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (க-110)

வறட்சியான காலநிலை

# கிளிநொச்சி மாவட்டத்தில் 2,052 குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள குடும்பங்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய 2 ஆயிரத்து 52 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 876 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது.

அதையடுத்து கிளிநொச்சி மாவட்டச்செயலகம் பாதுகாப்பு அமைச்சினூடாக மாவட்ட இடர் நிவாரண சேவைகள் பிரிவின் உதவியுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் முதற்கட்டமாக இந்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

# கிருமிநாசினிகளை உற்பத்தி செய்யவும்

## கூட்டுத்தாபனத்துக்கு அமைச்சு பணிப்பு

உயர் தரம்வாய்ந்த கிருமிநாசினி உள்ளிட்ட விவசாய உற்பத்திகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கனிய எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் அங்கு நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போது அமைச்சர் மகிந்த அமரவீர இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

நியாயமான விலைக்கு பெறக்கூடிய கிருமிநாசினி உள்ளிட்ட விவசாய உற்பத்திகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமானால் அது நாட்டின் விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

'சிபெட்கோ' என்ற வர்த்தகப் பெயரில் கடந்த காலங்களில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விவசாயத்துறைக்கு தேவையான பல்வேறு கிருமி நாசினிகளை உற்பத்தி செய்திருந்தது. அவை விவசாயிகள் மத்தியில் வரவேற்பைப் பெற்றன. இந்தநிலையில், மீண்டும் கிருமிநாசினி உள்ளிட்ட விவசாயத்துறைக்கான பொருள்களை உற்பத்தி செய்யுமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்மூலமாக தரமான கிருமி நாசினிகளை குறைந்த விலையில் விவசாயிகள் பெற்றுக் கொள்ள முடியும்.

அதேவேளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனக் களஞ்சியத் தொகுதி ஆகியன இணைந்து இந்த கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காலகட்டங்களில் கை கழுவுவதற்கான திரவத்தை தயாரித்து குறைந்த விலையில் விற்பனை செய்திருந்தது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (கு)

## சமூக வலைத்தளங்களில்

# போலிப் பரப்புரை செய்துவந்தனரென மருத்துவர்கள், பல்கலையினர் கைது

**கொழும்பு, மே 29**

**கொரோனா குறித்து சமூக வலைத்தளங்களில் போலிப் பரப்புரைகள் முன்னெடுப்பவர்கள் குறித்த விசாரணைகளுக்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.**



இத்தகைய 400 சம்பவங்கள் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்து இதுவரை 16 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் மருத்துவர்கள், பல்கலைக்கழக நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பல்கலைக் கழக மாணவர் ஒருவரும் அடங்குகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (கு)

# சிறீரெலோ கட்சி அலுவலகம் திறப்பு

முல்லைத்தீவு, மே 29

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு பகுதியில் சிறீரெலோ கட்சி அலுவலகம் ஒன்றை நேற்று திறந்துள்ளது.

கட்சியின் வேட்பாளர் ஆ.சதுதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட தேர்தல் தொகுதியின் முதன்மை வேட்பாளரும் கட்சியின் செயலாளர் நாயகமுமான ப.உதயராசா, முல்லைத்தீவு மாவட்ட வேட்பாளர்களான சுதன், தவராசசிங்கம், கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் த.நவநீதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (கு-19)



# நானாட்டானில் இன்று குருதித் தானம்

மன்னார், மே 29

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை தொடக்கம் குருதித் தானம் நடைபெறவுள்ளது என்று பிரதேச செயலர் மா.சிறீஸ்கந்தகுமார் தெரிவித்தார்.

நானாட்டான் பிரதேச செயலகம் மற்றும் நானாட்டான் பொது சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை ஆகியன இணைந்து இதை முன்னெடுக்கின்றன.

இதில் இளைஞர்கள், இளம்பெண்கள் கலந்துகொண்டு குருதித்தானம் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. (கு-56)

# முல்லைத்தீவிலிருந்து கொழும்புக்கு இ.போ.ச.

## இன்று ஆரம்பிக்கின்றது

முல்லைத்தீவிலிருந்து கொழும்புக்கு இ.போ.சவின் போக்குவரத்து இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று முல்லைத்தீவு பேருந்து சாலை அறிவித்துள்ளது.

கொரோனா தொற்று காரணமாக கடந்த இரண்டு மாதங்களாக முல்லைத்தீவு சாலையிலிருந்து வடக்குக்கு வெளியேயான போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் வடக்கு மாகாணத்துக்குள் மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், கொழும்புக்கான சேவை ஆரம்பிக்கப்படுகின்றது என்று தெரிவித்தனர்.

முல்லைத்தீவு சாலைக்கு சொந்தமான அரச பேருந்து இன்று அதிகாலை 5.30 மணிக்கு கொக்கிளாயிலிருந்து புறப்பட்டு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சென்று கேப்பாபிலவு ஊடாக தண்ணீரூற்று, ஒட்டுசுட்டான் வழியாக நெடுங்கேணி சென்று வவுனியா, புத்தளம், நீர்கொழும்பு வளியாக கொழும்பை சென்றடையும் என்று தெரிவித்தனர். கொழும்பிலிருந்து நாளை முல்லைத்தீவு நோக்கி இதே வழித்தடத்தில் பயணிக்கவுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட பேருந்து சாலையினர் தெரிவித்தனர். (கு-19)



மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா நேற்று அஞ்சலி செலுத்தினார். (கு)

## பொதுமன்னிப்புக் காலத்தில்

# குவைத்திலிருந்து இலங்கை வருவதற்கு பலர் விருப்பம்

கொழும்பு, மே 29

குவைத் நாட்டில் விசா செல்லுபடியாகும் காலம் நிறைவடைந்தும் தங்கியிருப்பவர்கள் பொதுமன்னிப்புக் காலத்தில் இலங்கைக்கு வருவதற்கு எதிர்பார்த்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குவைத் நாட்டில் விசா செல்லுபடியாகும் காலம் நிறைவடைந்தும் நாட்டில் தங்கியிருக்கும் அனைவரையும் நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக பொதுமன்னிப்புக் காலம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. குறித்த பொதுமன்னிப்புக் காலம் இறுதி நாள்களை நெருங்கியுள்ளது.

ஒருலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் சட்டரீதியாக அங்கு தங்கியுள்ளனர். அவர்களில் 19ஆயிரம் இலங்கையர்களின் விசாக் காலம் நிறைவடைந்துள்ளது.

இதன் காரணமாக பொதுமன்னிப்பு காலத்தில் அவர்களில் அதிகமானோர் இலங்கை வருவதற்கு எதிர்பார்த்துள்ளனர். அந்த நாட்டில் தங்கியுள்ள பாரியளவிலான இலங்கையர்கள் தற்போது கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குவைத் அரசாங்கம் கொரோனா வைரஸின் போது உலகம் ஏற்றுக்கொண்ட மரபுகளுக்கு அப்பால் செயற்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அவர்கள் இலங்கை உட்பட வெளிநாட்டுப் பணியாளர்களை வெளியேற்றும் போது உரிய சுகாதாரப் பாதுகாப்பு முறையைப் பின்பற்றாமல், சிறிய இடங்களில் அதிகமானோரைத் தங்க வைத்துள்ளதாக சங்கத்தின் தலைவர் வைத்தியர் அனுருந்த பாதெனிய தெரிவித்துள்ளார்.

இதனால் அந்த நாட்டில் உள்ள இலங்கையர்கள் அனைவரும் கொரோனா தொற்றுக்குள்ளாக வாய்ப்புகள் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் எதிர்வரும் நாள்களில் குவைத்தில் இருந்து இலங்கையர்களை அழைத்துவரும்போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# கூட்டங்கள் நடத்த சுகாதார விதிமுறை

கொழும்பு, மே 29


கொரோனா வைரஸ் தொற்றையடுத்து ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமைக்கமைய கூட்டங்கள் நடத்துவதற்கு சுகாதார விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளி அரங்கில் அல்லது உள் அரங்கில் கூட்டம் நடத்துவதென்றால் ஆள்களுக்கிடையே ஒரு மீற்றர் தூரத்தில் நடத்த வேண்டும். எனினும், கூட்டத்தில் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டும்.

தற்போதைய நிலைமையின் கீழ் பகிரங்க கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படாது. எனினும் முக்கிய கூட்டங்கள் நடத்துவதென்றால் அனைவரும் முக கவசம் அணிவது கட்டாயமாகும்.

கலந்து கொள்ளும் அனைவரும் சவர்க்காரம் பயன்படுத்தி கை கழுவுதல், செனிடைஸர்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

கூட்டங்கள் நடத்த அனுமதி வழங்கப்பட்டாலும் பகிரங்க கூட்டங்கள் நடத்துவதென்றால் அதற்கு அரச அனுமதி பெறவேண்டும் என்று சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (கு)



# கொரோனா நெருக்கடிக்குள் வடக்கின் விவசாயிகள்

## கடமை தவறிய வடக்கு மாகாண நிர்வாகம்

நோக்கரிய நோக்கன்

கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக் காலத்தில் பொருளாதார ரீதியாக உலகமெங்கும் ஏழை மக்கள் தீவிரமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாய கூலித் தொழிலாளர்கள், கடற்றொழில் கூலித் தொழிலாளர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வருமானமிழந்த குடும்பத் தலைவிகள் எனப் பலர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தினக் கூலிகளான தொழிலாளர்களிடம் சேமிப்புக்களோ, பெறுமதிமிக்க அசையும் சொத்துக்களோ அசையாச் சொத்துக்களோ சிறிதளவும் இல்லை.

இத்தகைய தொழிலாளர்கள் தமது வாழ்வாதார உழைப்புக்காக சொந்த விவசாய நிலங்களைக் கொண்டிருக்கும் விவசாயிகளையும் இயந்திரப் படகுகள் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்களைக் கொண்டிருக்கும் கடற்றொழில் 'குட்டி முதலாளிகளான' சம்மாட்டிமார் முதலியோரையே நம்பியிருந்தனர்.

**விவசாயிகள் அவலம்**

பெருந்தொற்றுக் காலத்தின் ஊரடங்கு மற்றும் போக்குவரத்து மூடுகைகளால் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த முடியாத நிலையில் தமது தோட்டக் காணிகளில் மரக்கறிப் பயிர்களையும் பப்பாசி போன்ற பழ மரங்களையும் வெட்டி உழுது புரட்டிவிட்டார்கள். ஏனெனில் நீர்பாய்ச்சல், பீடைக் கட்டுப்படுத்தல், நோய்க் கட்டுப்படுத்தல், களை கட்டுப்படுத்தல், பசளையிடுதல் முதலிய செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்ளக் கூடியளவுக்கு உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தி பணம் பெற முடியாத நிலையை வடக்கு மாகாண விவசாயிகள் சந்தித்துள்ளனர். இந்த நிலையில் அவலப்படும் விவசாயி களைப் பொறுத்தவரையில் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்து, சம்பளம் கொடுக்கக் கூடியளவுக்கு வேலையோ தேவையோ அவர்களிடம் இல்லை.

**அரங்கேறும் பொய் நாடகம்**

நிலைமை இவ்வாறு இருக்க வெறும் காட்சிப்படுத்தல்களாக மற்றுமொரு பொய் நாடகமும் அரங்கேற்றப்படுகிறது. ஆங்காங்கு வெவ்வேறு நிலையில் உத்தியோகத்தர்களுக்கு நாடளாவிய ரீதியில் மரக்கறிப் பயிர்களின் வித்துக்கள் வழங்கப்பட்டு 'வீட்டுத் தோட்டம் செய்யுங்கள்' எனும் விழிதுடைப்புச் செய்யப்படுகிறது. மாகாணங்கள் முழுவதும் காலம் காலமாக பரம்பரை பரம்பரையாக தொழில்முறையாக 'நாட்டுத் தோட்டங்கள்' செய்வோரின் அறுவடைக்கான சந்தைப்படுத்தல் முறைமைகளோ, யுக்திகளோ அல்லது அவற்றை நீண்ட காலத்துக்கு சேமித்து பயன்படுத்தக் கூடிய உபகரணங்களோ வசதி வாய்ப்புக்களோ மத்திய மற்றும் மாகாண விவசாய இலாகாக்களைச் சேர்ந்த விவசாயத் துறை அதிகாரிகளால் பெருந்தொற்றுக் காலத்திலோ அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்றே தெரிகிறது. 'நாட்டுத் தோட்டங்களை' அழியவிட்டு 'வீட்டுத் தோட்டங்களை' ஊக்குவிக்கும் அபத்தக் காட்சிகள் அரங்கேறுகின்றன.

அடுத்த பருவகாலத்துக்கு தொழில்முறையான தோட்டக்காரர்கள் மரக்கறி வகைப் பயிர்களையும் பழப்பயிர்களையும் நடுவதற்கு தயங்குவார்கள். அல்லது பயிர்ச்செய்கை அளவைக் குறைப்பார்கள். உரிய முறையில் பயிர்கள் வளர்வதற்கான விவசாயச் சூழல், வீட்டு வளவில் தொடர்ச்சியாகக் கிடைக்க மாட்டாது. அதுமட்டுமல்ல, ஒரு பரப்பு அல்லது அரைப்பரப்பு காணிக்குள் வாழும் ஏழைக்குடும்பங்களுக்கு வீட்டுத் தோட்டம் செய்வதற்கு நிலம் கிடைக்காது. மண்போட்ட பைகளிலும் சாடிகளிலும் நாலைந்து வெவ்வேறு மரக்கறிப் பயிர்களை நாட்டி நுகர்வுக்குத் தேவையான அளவு அறுவடை பெற முடியுமா? அப்படிப்பெற்றாலும் எத்தனை மாதங்களுக்கு பெற முடியும்?

வேண்டுமானால், விவசாய இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் எங்காவது ஓரிரு இடங்களில் மண் நிரப்பிய சாடிகளிலும் பைகளிலும் செழிப்பாக வளரும் மரக்கறிப் பயிர்களைச் சென்று பார்த்து படம் பிடித்து- வீட்டுத் தோட்டம் செய்யும் திட்டம்- அழகாக, அற்புதமாக 'சட்டப்படி' அமுலாகிறது என்று அறிக்கையிடுவதற்கு இந்தத் திட்டம்'ஒரு தடவை' உதவலாம்.

**வீட்டுத் தோட்டம் ஏன் சாத்தியமில்லை?**

எல்லோரிடமும் வீட்டு வளவில் தோட்டம் செய்யக் காணி இல்லை. காணியிருந்தாலும் இயற்கை வளமாக்கிகளோ செயற்கை வளமாக்கிகளோ பயன்படுத்துவதில் சாத்தியமின்மைகள் அதிகம். பயிர் நோய்க் கட்டுப்பாடு, பீடைக் கட்டுப்பாடு முதலியனவெல்லாம் சாத்தியமில்லை. பத்துப் பதினைந்து நாற்றுக்களை சாடிகளிலும் சாக்குகளிலும் நட்டு நட்டு வருடம் முழுவதும் பராமரித்து உணவுத் தேவைக்கு போதிய மரக்கறி வகைகளைப் பெற முடியாது. அத்துடன் வெவ்வேறான தொழில்துறைகளில் இரவு பகலாகப் பணியாற்றக் கூடிய குடும்பத் தலைவர்கள் மற்றும் தலைவிகளாலோ அக்குடும்பங்களில் கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளிலும் வேறு வேறு கணினித் தொழில்நுட்ப விவகாரங்களிலும் நாட்டம் காட்டும் மாணவர்களாகவிருக்கும் அக்குடும்பத் தலைவர்களது பிள்ளைகள்லோ இத்தகைய கண்துடைப்பு வீட்டுத் தோட்டங்களைப் பராமரிக்கவும் முடியாது.

அதேவேளை வீட்டுத் தோட்டங்கள் திணிக்கப்பட்டு அவரவர் குடும்பம் தத்தமக்கான மரக்கறி வகைகளை தங்கள் வீடுகளிலேயே உற்பத்தி செய்து பெற வேண்டும் எனும் திட்டம் சிலவேளை 'முயற்கொம்பு' போல சாத்தியப்பட்டால் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் வாழும் தொழில்முறையான ஆயிரக்கணக்கான மரக்கறிப் பயிர்ச் செய்கையாளர்களும் அவர்களது குடும்பங்களும் பாதிக்கப்படும் நிலையும் உருவாகும். அவர்களது அருமையான வளமான தோட்ட நிலங்கள் கைவிடப்படும் நிலையே வரும். அத்துடன் மரக்கறிப் பயிர் செய்யும் விவசாயிகளின் குடும்பங்கள் வறுமைக்குள் தள்ளப்படுவார்கள். வறுமையின் நிமித்தம், தொழில்முறை மரக்கறிப் பயிர்ச் செய்கை அனுபவம் மிக்க அவர்கள் மரக்கறிப் பயிர்ச் செய்கையை கைவிட்டு தமக்கு பொருத்தமில்லாத வேறு தொழில்களைச் செய்யத் தொடங்குவார்கள். அல்லது எவ்வித தொழில் முயற்சிகளும் மேற்கொள்ளாமல் வெறுமனே அரச நிவாரணத்துக்கு 'கொட்டாவி விட்டப்படி' காத்துக்கிடப்பார்கள். சிறிது காலத்தில் தமது வளம்மிக்க 'செம்பாட்டு மற்றும் இருவாட்டி நிலங்களான தமது காணிகளை பயிர்ச் செய்கை நோக்கமற்றவர்களுக்கு மலிவு நிலையில் விற்றுவிடுவார்கள்.

**கட்டடக் காடுகளாகும் விவசாய நிலங்கள்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் இத்தகைய நிலை கடந்த நாற்பது ஆண்டுகளில் ஏற்கனவே தோன்றிவிட்டது. விவசாயிகளிடமிருந்து வளமான பயிர்ச் செய்கை நிலங்களை வாங்கியவர்கள் வெவ்வேறு தேவைகளுக்காக அந்நிலங்களைக் 'கட்டடக் காடுகளாக்கி' வருகிறார்கள். போர்க்காலத்திலும் போருக்கு பிந்திய காலத்திலும் வடமாகாணத்தில் பல்வேறு காரணங்களால் விவசாயிகள் தம்மிடமிருந்த வளமான நிலங்களை இழந்தார்கள் அல்லது மலிவு நிலைக்கு முதலாளிய 'முதலைகளுக்கு' விற்றார்கள்.

**ஊக்கம் மிக்க வடக்கு விவசாயிகள்**

40 வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணமும் வன்னியும் மரக்கறிப் பயிர்ச் செய்கையிலும் விலங்கு வேளாண்மையிலும் நெற்செய்கையிலும் சிறுதானியப் பயிர்ச் செய்கையிலும் தன்னிறைவு மிக்கதாக இருந்ததோடு இலங்கையின் ஏனைய மாவட்டங்களுக்கும் அவற்றை விநியோகிக்கும் ஆற்றல் மிக்கதாகவிருந்தன. இப்பொழுதும் காய்கறிவகைகளும், மரவள்ளி, கரணை, உருளைக்கிழங்கு, கரட், இராசவள்ளிக்கிழங்கு முதலிய கிழங்கு வகைகள், மிளகாய், வெங்காயம் உள்ளிட்ட சுவை சரக்குப் பயிர்கள் முதலிய வற்றை யெல்லாம் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் பயிர் செய்து ,வடக்கு மாகாண மக்களுக்கும் ஏனைய மாகாண மக்களுக்கும் விநியோகிக்கும் ஆற்றலும் பண்பும் மிக்கவர்களாகவே எமது விவசாயிகள் இருக்கிறார்கள். ஆயினும் வன்னியில் விவசாயிகள் தமது மரக்கறிப் பயிர்களையும் பழப் பயிர்களையும் இப்பெருந்தொற்றுக் காலத்தில் அப்படியே கைவிட்டு அவற்றின் காய்கள் பழுத்து அழுகிச்சிதையவிட்டார்கள். யாழ்ப்பாணத்தில் தோட்டங்களை அழித்தார்கள். ஏன்?

**பெருந்தொற்றுக்கால விவசாய முகாமைத்துவம்**

வடக்கு மாகாணத்தில் நெற்பயிர்ச் செய்கை வருடந்தோறும் ஒரு லட்சத்து பதின்மூன்றாயிரம் ஹெக்ரேயர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் பெருமளவுக்கு நேரடி மழையை நம்பியும் குளங்களில் சேமிக்கப்படும் நீர் மூலமும் மேற்கொள்ளப்படுகிறது. கிடைக்கும் மழையைப் பொறுத்தும் குளங்களில் சேமிக்கப்படும் நீரின் அளவைப் பொறுத்தும் நெற்பயிர்ச் செய்கை நிலத்தின் அளவு சற்றுக் கூடவோ குறையவோ சந்தர்ப்பம் உள்ளது. வருடந்தோறும் இவ்வாறு யாழ்ப்பாணத்தில் பெரும்போகத்திலும் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் பெரும்போகத்தி

(தொடர்ச்சி)

லும் சிறுபோகத்திலும் மூன்று லட்சத்து முப்பதினாயிரம் மெற்றிக் தொன்னுக்கும் மேற்பட்ட அளவு நெல் உற்பத்தி செய்யப்படுகிறது.

மிளகாய், பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், கௌபி, பயறு, உழுந்து நிலக்கடலை, சோளம், குரக்கன், எள் முதலிய உப உணவுப் பயிர்கள் வருடந்தோறும் வடக்கு மாகாணத்தில் ஏறத்தாழ இருபத்தியிரண்டாயிரம் ஹெக்ரேயருக்கும் மேற்பட்ட விஸ்தீரணமுள்ள நிலத்தில் பயிரிடப்படுகின்றன. உபஉணவுப் பயிர்களின் அறுவடையின் அளவு வருடந்தோறும் ஏறத்தாழ நாற்பத்தெட்டாயிரம் மெற்றிக் தொன் அளவாக உள்ளது.

மா, பப்பாசி, வாழை, தோடை, எலுமிச்சை, திராட்சை, பலா, கொய்யா, மாதுளை, அன்னாசி முதலிய பழப் பயிர்கள் வருடந்தோறும் வடக்கு மாகாணத்தில் ஏறத்தாழ ஆறாயிரம் ஹெக்ரேயர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் பயிரிடப்படுகின்றன. இவற்றில் சில நீண்ட காலப் பயிர்களாகவிருக்கும். இப்பழப் பயிர்களின் வருடாந்த அறுவடை ஏறத்தாழ எழுபதினாயிரம் மெற்றிக் தொன் ஆகும்.

கத்தரி, தக்காளி, அவரை வகை மரக்கறிகள், கிழங்கு வகை மரக்கறிகள், வெண்டி, பூசணிக் குடும்ப மரக்கறி வகைகள் முதலியன வருடந்தோறும் வடக்கு மாகாணத்தில் எட்டாயிரம் ஹெக்ரேயரிலும் அதிகளவான விஸ்தீரணமுள்ள நிலத்தில் பயிரிடப்படுகின்றன. இதன் மூலம் வருடந்தோறும் எழுபத்தையாயிரம் மெற்றிக்தொன் அளவுள்ள மரக்கறிவகைகள் அறுவடையாகக் கிடைக்கின்றன.

மேற்கூறப்பட்ட அளவுகளை அவதானித்து உணரும் ஒருவருக்கு பொதுப்புத்தியின் அடிப்படையில் பின்வரும் முக்கிய கேள்வி எழுகிறது.


வடக்கு மாகாணத்துக்குத் தேவையான உப உணவுப் பயிர்களையும் பழப் பயிர்களையும் மரக்கறிப் பயிர்களையும் 'வீட்டுத் தோட்டங்கள்' மூலம் பெற முடியுமா? சிலநூறு தனிப்பட்ட குடும்பங்கள் (போதிய காணி உள்ளவர்கள்) வடக்கில் பழப்பயிர்களையும் சில மரக்கறிப் பயிர்களையும் வீடுகளில் வளர்த்து அவ்வப்போது சிறு சிறு அறுவடைகளைப் பெற்று 'சுயஇன்பம்' காண முடியும். அவற்றைப் படமெடுத்து தமது அறிக்கையில் சேர்த்து சில விவசாய இலாகா அதிகாரிகள் அரசின் வீட்டுத் தோட்டத் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதாக அறிக்கையிட முடியும். அது பெரிய 'சுத்துமாத்தாகவே' அமையும்.

மேற்கூறப்பட்ட புள்ளிவிவரங்களில் உள்ளவாறு அவ்வளவு பெரிய விஸ்தீரணமுள்ள நிலங்களில் அத்துணையளவு மெற்றிக்தொன் அறுவடையைப் பெறுகின்ற பயிர்ச் செய்கையை தமது வாழ்வாதாரத்துக்கான வருமானமாகக் கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் தமது தொழில் முயற்சிகளின் வாயிலான மேலும் பல்லாயிரக்கணக்கான விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பையும் சீவியத்துக்கான வருமானத்தையும் கொடுக்கின்றன.

அத்துடன் மேற்படி தொழில்முறையான விவசாயத்துக்கான விவசாய உள்ளீடுகள், பொறிநுட்ப உபகரணங்கள் முதலிய வர்த்தகத்தில் ஈடுபடும் தனியார் துறை நிறுவனங்களும் அவற்றில் பணியாற்றும் பணியாளர்களும் தமது இருப்புக்கும் வருமானத்துக்கும் வடக்கு மாகாணத்தில் விவசாயிகளின் அயர்வில்லா சோர்வில்லா உழைப்பிலேயே தங்கியிருக்கின்றனர்.

அத்துடன் மேற்சொல்லப்பட்ட தொழில்முறையான பயிர்ச் செய்கையாளர்களின் அறுவடைகளையும் உற்பத்திகளையும் மொத்த வியாபாரம் செய்தும் சில்லறை வியாபாரம் செய்து உழைக்கின்ற பலநூறு குடும்பங்கள் வடக்கில் இருக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் இத்தகைய தொழில்முறை விவசாய முயற்சியாண்மையையும் விவசாயிகளையும் அவர்களின் அறுவடைகளையும் சந்தைப்படுத்தலையும் களஞ்சியப்படுத்தலையும் பயிர்ச் செய்கைக்கான நீர் விநியோகம், உள்ளீடுகள் விநியோகம் முதலியவற்றை வழிப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் இம்மாகாணத்தில் மத்திய அரசின் கீழும் மாகாண ஆளுநரின் பொறுப்பில் தற்போது இருக்கின்ற மாகாண நிர்வாகத்தின் கீழும் வெவ்வேறு திணைக்களங்கள் இருக்கின்றன. அத்துடன் அத்திணைக்களங்களுடன் சேர்ந்தியங்க வேண்டிய வெவ்வேறு அரச துறைகளும் இருக்கின்றன.



பெருந்தொற்றுக் காலத்தின் ஊரடங்கு மற்றும் போக்குவரத்து மூடுகைகளால் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த முடியாத நிலையில் தமது தோட்டக் காணிகளில் மரக்கறிப் பயிர்களையும் பப்பாசி போன்ற பழ மரங்களையும் வெட்டி உழுது புரட்டி விட்டார்கள். ஏனெனில் நீர்ப் பாய்ச்சல், பீடைக்கட்டுப்படுத்தல், நோய்க் கட்டுப்படுத்தல், களை கட்டுப்படுத்தல், பசளையிடுதல் முதலிய செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளக் கூடியளவுக்கு உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்திப் பணம் பெற முடியாத நிலையை வடக்கு மாகாண விவசாயிகள் சந்தித்துள்ளனர்.

**விவசாய அதிகாரிகள் என்ன செய்தார்கள்?**

வடக்கு மாகாணத்தின் அரச துறை , கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தின் விவசாயத் துறை முகாமைத்துவத்தில் பின்வருமாறு செயற்பட்டதாகவே அவதானிகள் கூறுகின்றனர்.

பழப் பயிர்ச்செய்கையாளர்களும் மரக்கறிப் பயிர்ச் செய்கையாளர்களும் தமது உற்பத்திகளை எங்கே எப்படி எவ்வாறு சந்தைப்படுத்துவது அல்லது சேமிப்பது அல்லது வேறு பெறுமதிசேர் வடிவங்களாக மாற்றுவது என்று அல்லோலகல்லோலப்பட்டு கொண்டிருந்தபோது அத்துறையினர் சார்ந்த எந்த கள உத்தியோகத்தர்களோ அதிகாரிகளோ , அக்களங்களுக்கு விஜயம் செய்து ஆலோசனை கூறாவிட்டாலும் பரவாயில்லை. ஆறுதலாவது கூறவில்லை. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் வாழும் குடும்பங்களில் 34 வீதமான குடும்பங்கள் ஏறத்தாழ 64,000 குடும்பங்கள் மேற்படி பயிர்ச் செய்கைகளின் மூலம் சீவியம் நடத்துபவர்கள். யாழ்.மாவட்டத்தில் விவசாயக் குடும்பங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஏறத்தாழ விவசாயிகளாகவிருக்கின்ற 9,500 பெண் பிரதிநிதிகளும் ஏறத்தாழ 36,000 விவசாயிகளாக இருக்கின்ற ஆண் பிரதிநிதிகளுமாக மொத்தமாக 45,500 விவசாயப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய 270 விவசாயிகள் அமைப்புக்கள் இருப்பதாக உத்தியோகபூர்வ புள்ளிவிவரம் ஒன்று காட்டுகிறது. அத்தகைய 270 விவசாய அமைப்புக்களுடனும் வடக்கு மாகாணத்தில் மத்திய அரச விவசாய இலாகாக்களும் மாகாண விவசாய இலாகாக்களும் பெருந்தொற்றுக் காலத்தில் விவசாயிகள் சந்திக்கும் நெருக்கடிகளை அறிவதிலும் அணுகுவதிலும் தணிப்பதிலும் தீர்வுகளை எட்டுவதிலும் சேர்ந்தியங்கிச் செயற்பட்டனவா? எத்தகைய ஆலோசனைகள் விவசாய அமைப்புகளுக்கும் விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டன? விவசாயத் துறையோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொருத்தமான ஆலோசனைகளை வழங்கியிருந்தால் மரக்கறிப் பயிர்ச் செய்கையாளர்கள், எதிர்காலத்தில் தமது உற்பத்திகளை பொருத்தமான சந்தை விலையில் விற்கமுடியாது என்று ஏன்



உணர்ந்தார்கள்? பூவோடும் காயோடும் பிஞ்சுகளுடனும் ஏன் மரக்கறித் தோட்டங்களை நிலத்தோடு நிலமாக வெட்டிக் கொட்டி அழித்தார்கள்? பெருந்தொற்றுக் கால ஊரடங்கும் இறுக்கங்களும் படிப்படியாக அரசாங்கத்தால் தளர்த்தப்படும்போது அறுவடைகளை சந்தைப்படுத்தக் கூடியதாகவிருக்கும் எனும் அடிப்படைத் தகவல்களைக் கூட விவசாயிகளுக்கும் விவசாய அமைப்புக்களுக்கும் வழங்க வடக்கு மாகாணத்தில் இயங்கும் அரச விவசாய இலாகா தவறியது ஏன்? இதற்குப் பொறுப்பான அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் எவர்? எவர்?

**விதை கொடுப்பதுதான் தீர்வா?**

பெருந்தொற்றுக்காலக் கட்டுப்பாடுகள் மற்றும் ஊரடங்கால் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்தி பணம் பெற்று தோட்டப் பயிர்களைத் தொடர்ந்து பராமரிக்கும் செலவைக்கூட ஈடுசெய்ய முடியாது என்று அவசரப்பட்டு முடிவெடுத்து தமது மரக்கறிப் பயிர்களை பயிர்ச் செய்கையாளர்கள் நிலத்தோடு வெட்டி அழித்து உழுது பிரட்டிக் கொண்டிருந்தபோது வடக்கு மாகாணத்தில் அரச நிறுவனங்களில் பணியாற்றுவோருக்கு வீட்டுத் தோட்டம் செய்வதற்கு' விவசாய அதிகாரிகள் இலாகா விதைகள் வழங்கிக் கொண்டிருந்தார்கள். 'மேலிடத்தின் உத்தரவு' அதுதான் மரக்கறி விதைகள் வழங்கினோம்" என்று இலகுவாகக் கூறுவார்கள். அதுவல்ல பிரச்சினை.

பெருந்தொற்றுக் காலத்தில் நீங்கள் ஆற்ற வேண்டிய முக்கிய கடமைகளை மறந்தோ மறைத்தோ புறக்கணித்தோ செயற்பட்டிருக்கிறீர்கள்.

கொரோனா பெருந்தொற்றுக் கால விழிப்பூட்டல் அறிவுப்புக்களும் வழிகாட்டலும் சுகாதாரத் துறையினரிடமிருந்தும் பாதுகாப்புத் துறையினரிடமிருந்தும் ஜனாதிபதி செயலகத்திடமிருந்தும் மிக ஒழுங்காகவும் சீராகவும் நேர்த்தியாகவும் கடந்த பல வாரங்களாக கிடைத்த வண்ணமே உள்ளன.

அந்தத்தரப்புக்களின் அறிவிப்புக்கள் மற்றும் வழிகாட்டல்களை கிரகித்து அத்தரப்புகளுடன் உரிய தொடர்பாடல்களை மேற்கொண்டு விவசாய அமைப்புகளுக்கும் விவசாயிகளுக்கும் பொருத்தமான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கும் வகையில் செயற்பட யாழ்ப்பாண மாவட்டத்தில் அதற்குப் பொறுப்பான விவசாய இலாகா தவறியுள்ளது. விவசாயிகளின் உழைப்பிலும் அதன் மூலமாக மக்கள் அரசுக்கு கட்டும் வரிப்பணத்திலும் மாதாந்தச் சம்பளம் பெறும் மேற்படி இலாகாக்களின் அரச அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் இவ்வாறான ஒரு பெருந்தொற்றுக் கால அபாயச் சூழலில் யாழ்.மாவட்டத்தின் 64,000 குடும்பங்களின் வாழ்வாதாரத் தொழிலை பின்னடைவுக்கு உள்ளாக்கும் வகையில் கடமை தவறியுள்ளார்கள்.

இந்தப் பின்னடைவைச் சரிசெய்து ஒழுங்குபடுத்தும் வகையில் மேற்படி வடக்கின் விவசாயத் திணைக்களத்தைச் சாராத சுயாதீனமான விவசாயிகளையும் துறைசார்ந்த நிபுணர்களையும் உள்ளடக்கிய வகையில் துரிதகள ஆய்வை மேற்கொண்டு உண்மைகளைக் கண்டறிந்து எதிர்காலத்திலாவது இத்தகைய துரதிர்ஷ்டமான நிலைமைகள் விவசாயிகளுக்கு ஏற்படாமல் தொடரும் பெரும் தொற்றுக் கால விவசாய முகாமைத்துவத்தை மேற்கொள்வதில் உரியவர்கள் கவனமெடுக்க வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட இலங்கை அரச தலைமையின் நேரடிப் பிரதிநிதியான வடக்கு மாகாண ஆளுநரும் மாவட்டத்தின் பொதுநிர்வாகத்துக்கு பொறுப்புச் செல்ல வேண்டிய மாவட்டச் செயலரும் இவ்விடயத்தில் ஆக்கபூர்வமாகவும் அவசரமாகவும் செயற்படுவது தவிர்க்க முடியாதது.

# தொற்றிலிருந்து மீண்டவர்களுக்கு மீளவும் சோதனை அவசியமல்ல!

## தொற்று நோய்ப் பிரிவு ஆலோசனை

**யாழ்ப்பாணம், மே 29**

**கொரோனா தொற்றுப் பாதிப்புக்குள்ளாகி சிகிச்சை முடிந்து வீடு திரும்புபவர்களை 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலின் பின்னர் விடுவிக்கலாம். அவர்களுக்கு கொரோனா தொற்றுக்கான சோதனை இதன்போது மேற்கொள்ளத் தேவையில்லை இவ்வாறு கொழும்பு சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவு ஆலோசனை வழங்கியுள்ளது.**

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று திரும்பிய 6 பேர் 14 நாள்கள் சுயதனிமைப் படுத்தல் முடிவில் கொரோனாத் தொற்றுச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 5 பேருக்கு தொற்று இருப்பது அடையாளம் காணப்பட்டது. அவர்களது உடலில் இறந்த வைரஸே காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சீனா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் சிகிச்சைபெற்று வீடுதிரும்பியவர்களில் 10 சதவீதமானோருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களின் உடல்களிலும் இறந்த வைரஸே காணப்பட்டது. எனவே சிகிச்சை பெற்றவர்களின் உடல்களில் இறந்த வைரஸே காணப்படுவதால் அவர்களுக்கு மீண்டும் சோதனை அவ்சிய மில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-ஒ,5)

# டிமிக்கி கொடுத்த உபதவிசாளர்: உணவொறுப்பில் உறுப்பினர்

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பொலிகண்டி வட்டாரத்தில் போட்டியிட்ட வேட்பாளரான ஆ.முல்லை திவ்யன், பருத்தித்துறை பிரதேச சபையின் உபதவிசாளர் தினேஸ் தனக்கு வாக்களித்தபடி பதவிக்காலத்தைப் பகிர்ந்து தருவதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றார் என்று குற்றஞ் சாட்டியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

பருத்தித்துறை பிரதேச சபையின் உபதவிசாளர் தினேஸும் ஆ.முல்லைதிவ்யனும் போட்டியிட்டனர். தேர்தல் முடிந்த நிலையில் தனது பதவிக் காலத்தில் இரண்டு வருடங்களை வேட்பாளர் ஆ.முல்லை திவ்யனுக்கு வழங்குவதாக தினேஷ் உறுதியளித்திருந்தார். எனினும் தனது வாக்குறுதியின்படி அவர் தற்போது நடக்கவில்லை. பதவியைத் துறக்க மறுப்புத் தெரிவிக்கின்றார் என்று தெரியவருகின்றது. இதையடுத்து உபதவிசாளருக்கு எதிரான முல்லைத்திவ்யன் உணவொறுப்பிலும் ஈடுபடத் திட்டமிட்டுள்ளார். (ம)

# கோட்டை கடற்படை முகாமிலும் தொற்று

## 200 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு, கோட்டை பகுதியில் கடற்படையினர் தங்கியிருந்த கட்டடத்தில் கொரோனா தொற்றுடன் கடற்படைச் சிப்பாய் ஒருவர் நேற்று புதன்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளார். இதையடுத்து அங்கிருந்த 200 கடற்படையினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஒ,5)

### தமிழ்த்...

அதற்கு ஏற்றாற்போல தம்மைச் சரி செய்துகொள்ளவேண்டும்' இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக 50 ஆண்டுகளை நிறைவு செய்த மஹிந்தவிடம் இந்தியாவின் தொலைக்காட்சியொன்று நேர்காணல் ஒன்றைப் பதிவு செய்து ஒளிபரப்பியுள்ளது. அந்த நேர்காணலில் 'தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டதாக நினைக்கிறீர்களா?' என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இந்தக் கேள்விக்கு பதிலளிப்பதற்கு முன்னதாக இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு இருக்கும் பிரச்சினையும் தமிழ் அரசியல்வாதிகளின் பிரச்சினையும் வேறு வேறு என்பதைத் தெரிவிக்க வேண்டியது முக்கியமானது. மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்பதும் அவர்களுக்கு வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதும் முன்பு அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்த வாய்ப்புகளை பல திட்டங்கள் மற்றும் வளர்ச்சியின் மூலம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதும் எனது விருப்பமாக இருந்தது. எப்படியிருந்தாலும் அரசியல்வாதிகளுடன் இணைந்த அந்தச் சாலை மிகவும் நீண்டதாக கடினமாக இருந்தது. வடக்கு, கிழக்குப் பகுதிகளை தனி நாடாக்க வேண்டும் என்ற சிந்தனையின் மூலம் இந்த நாட்டில் தமிழ் அரசியல் நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்துகின்றது. இது நடைமுறை சாத்தியக் கோரிக்கையல்ல. வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளைத் தாண்டி ஏராளமான தமிழர்கள் வசித்து வருகின்றார்கள். தெற்கில் தமிழர்கள் சிறுபான்மையினர். கொழும்பு நகரில் தமிழ் மற்றும் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையினர். இலங்கையில் மக்கள் கலந்து அழகாக வாழ்கின்றனர். தனிநாடு என்பது சாத்தியமானது அல்ல. தமிழ் அரசியல்வாதிகள் களயதார்த்தைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்றாற்போல சரிசெய்துகொள்ள வேண்டும்' -என்றார். (ம-22)

### தாய்...

நொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த டிப்பர் மோதியதாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த கிளிநொச்சியைச் சேர்ந்த 64 வயதுடைய சுப்ரமணியம் அன்னலட்சுமி என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்தவராவார். அவரது மகள் படுகாயமடைந்தார். காயமடைந்தவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

டிப்பரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (சு-6,113)

### ஆறுமுகனின்...

வித்ததாவது:

இறுதிக் கிரியைகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அதுவும் சுகாதார பாதுகாப்புடன் நடத்த வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை பாதுகாப்புத்துறையினர் மேற்கொண்டுள்ளனர். தற்போதுள்ள நிலைமையில் பெருமளவில் மக்கள் கூட்டத்தை ஒரு இடத்தில் திரட்ட முடியாது. திரட்டவும் கூடாது. எனவே குடும்ப உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான மக்கள் இறுதி அஞ்சலியில் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் நடக்கின்றன என்றார் பிரதமர். (ஒ,5)

### கொரோனா...

1,530 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றுக்குள்ளாகியவர்களில் 754 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், 745 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர் எனவும், 10 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ம-22)


நீங்கா உம் நினைவில்
ஆண்டொன்றில் அஞ்சலி



பிறப்பு 24 • 05 • 1966
இறப்பு 29 • 05 • 2019

செல்வி வளர்மதி பூவிலிங்கம்

அன்பு முகம் மறைந்து
ஆண்டொன்றானதே
ஆனாலும் அழியா எம் நெஞ்சில்
மலர்ந்த மதி நீ
மாறுமோ எம் சோகம்
ஆறுமோ இப் புவியில்
ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும்
ஆறாது அழியாது எம்
அன்பு சகோதரியே!

என்றும் உன் நினைவுடன்
அன்பு நிறைந்த
பூ.சந்திரவதனாவும் சகோதரிகளும்,
நசந்தன்-வனஜா குடும்பம்.

இல.85, தேவாலய வீதி,
சுப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

# ஐ.தே.கவில் இருந்து எம்மை நீக்கும் அதிகாரம் ரணில் அணிக்கு இல்லை

## மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்கிறது சஜித் அணி

**கொழும்பு, மே 29**

**ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து எம்மை நீக்கும் அதிகாரம் ரணில் அணிக்கு கிடையாது. தன்னிச்சையான முறையில் தவறான முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுத்தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள். என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**



ஐக்கியமக்கள்சக்தியுடன் இணைந்து செயற்படும் தமது கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 102 பேரின் கட்சி உறுப்புரிமையை நீக்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது. கட்சியாப்பை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று கட்சியின் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், ஐ.தே.கவின் இந்த நடவடிக்கை குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்திய அதன் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு வழங்கிய அனுமதியின் பிரகாரம்தான் ஐக்கிய மக்கள் சக்தி என்ற கூட்டணியை உருவாக்கினோம். பிரதமர் வேட்பாளராக சஜித்தை நிறுத்துவதற்கும், செயலாளர் ஒருவரை நியமிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு அனுமதி வழங்கிவிட்டு இன்று ஐக்கிய தேசியக்கட்சியால் தவறானதொரு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகித்தவர்களில் 12 பேர் இந்தமுறை தேர்தலில் போட்டியிடவில்லை. 80 பேர் எம்முடனேயே இருக்கின்றனர். விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே ஐ.தே.க. பட்டியலில் போட்டியிடுகின்றனர். அதேபோல் 69 அங்கத்தவர்களைக் கொண்ட ஐ.தே.க. செயற்குழு உறுப்பினர்களில் 40க்கும் மேற்பட்டோர் எம்முடனேயே இருக்கின்றனர். எனவே, கட்சி உறுப்புரிமையில் இருந்து எம்மை நீக்குவதற்கு அந்த குழுவுக்கு அதிகாரம் இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி என்ற பெயரை மட்டும் வைத்துக்கொண்டு அரசுக்கு சார்பான அரசியலை நடத்தும் அந்தக் குழுவுக்கு மக்கள் தக்கபாடத்தை தேர்தலில் புகட்டுவார்கள்" - என்றார். (த-44)

# மனுக்களை தள்ளுபடிசெய்யவா விசாரணைகள் ஒத்திவைப்பு?

*சந்தேகம் தெரிவிக்கிறது சஜித் அணி*

கொழும்பு, மே 29

"நாடாளுமன்றத் தேர்தலுக்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணைகள் 7ஆவது தடவையாகவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இது எமக்குப் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது மனுக்களை இறுதியில் தள்ளுபடி செய்யவா உயர்நீதிமன்றத்தின் விசாரணைகள் இவ்வாறு ஒத்திவைக்கப்படுகின்றன? என்ற சந்தேகம் எங்கள் மத்தியில் எழுந்துள்ளது." என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாடாளுமன்றத் தேர்தலுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் சிவில் அமைப்புகளினாலும், எதிர்க்கட்சிகளினாலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஜனாதிபதியின் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வர்த்தமானி அறிவிப்பு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தேர்தல் திகதி வர்த்தமானி அறிவிப்பு ஆகியவற்றை சவாலுக்குட்படுத்தியே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கடந்தவாரம் திங்கட்கிழமை தொடக்கம் குறித்த மனுக்கள் மீதான விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டு வருகின்றன. நேற்றுமுன்தினம் 7ஆவது நாளாகவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இது எமக்குப் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது மனுக்களை இறுதியில் தள்ளுபடிசெய்யவா உயர்நீதிமன்றத்தின் விசாரணைகள் இவ்வாறு ஒத்திவைக்கப்படுகின்றன என்ற சந்தேகம் எம்மத்தியில் எழுந்துள்ளது"-என்றார். (த-22)

பாடசாலைகளில்

# முதலாம் தரத்துக்கான விண்ணப்பப் படிவம் வெளியீடு

கொழும்பு, மே 29

எதிர்வரும் 2021 ஆம் வருடத்துக்காக அரச பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவம் வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, முதலாம் தரத்துக்கு தமது பிள்ளைகளை அனுமதிக்க எதிர்பார்த்துள்ள பெற்றோர் அல்லது சட்டரீதியான பாதுகாவலர்கள், கல்வியமைச்சால் வெளியிடப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்ப தயார் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை நிரப்பி, தமக்கு பொருத்தமான பாடசாலைகளின் அதிபர்களிடம் 2020 ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அனைத்து தகுதிகளும் பூர்த்தியாக்கப்பட்டு 2020 ஜூன் 30 ஆம் திகதிக்கு செல்லுபடியாகுமாறு இருப்பதோடு அனைத்து எழுத்துமூல ஆவணங்களும் அந்தத் தினத்துக்கு இணங்க சமர்ப்பிக்கப்பட வேண்டும் - என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# கொரோனாவை வைத்து அரசை பலவீனமாக்காதீர்!

*எதிர்க்கட்சிக்கு பெரமுன கூறுகிறது*

கொழும்பு, மே 29

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தி, நாட்டைப் பாதுகாக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிர்த்தரப்பினர் ஆதரவு வழங்கவில்லை. கொரோனா வைரஸை காரணம் காட்டி அரசை பலவீனப்படுத்தி அரசியல் இலாபம் தேடிக் கொள்ளவே அவர்கள் முயற்சிக்கின்றார்கள் என்று தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார். எதிர்த்தரப்பினரின் அரசியல் பரப்புரைகளில் மக்கள் கவனம் செலுத்தக்கூடாது - என்றும் அவர் தெரிவித்தார். (த)

# பொருளாதார நெருக்கடியை இணைந்து எதிர்கொள்வோம்

*மஹிந்தவிடம் கோபால் பாக்லே உறுதி*

கொழும்பு, மே 29

தற்போதைய நெருக்கடி நிலை மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்படவிருக்கும் பொருளாதார நெருக்கடி என்பனவற்றுக்கு முகங்கொடுப்பதில் இலங்கையுடன் ஒருமித்து நிற்பதற்கு இந்தியா தயாராக இருப்பதாக இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே பிரதமரிடம் உறுதியளித்தார்.



இலங்கைக்கான தூதுவராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கோபால் பாக்லே அலரிமாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் பிரவேசம் இடம்பெற்று 50 வருடங்கள் பூர்த்தியடையும் நிலையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. அதன்போது தூதுவர் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டு புதுடில்லியில் இடம்பெற்ற பிரதமர் நரேந்திர மோடியின் பதவிப்பிரமாண நிகழ்விலான உரையாடலை நினைவுகூர்ந்த மஹிந்த ராஜபக்ஷ, கடந்த பெப்ரவரி மாதம் தான் மேற்கொண்டிருந்த இந்தியப் பயணம் குறித்தும் சுட்டிக்காட்டினார்.

அவரைத் தொடர்ந்து இலங்கை இந்திய நாடுகளுக்கு இடையிலான நல்லுறவை மேலும் விரிவாக்குவதற்கான செயற்றிட்டத்தைத் தான் கொண்டிருப்பதாக பாக்லே கூறினார். தற்போதைய நெருக்கடிநிலை மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்படவிருக்கும் பொருளாதார நெருக்கடி என்பனவற்றுக்கு முகங்கொடுப்பதில் இலங்கையுடன் ஒருமித்து நிற்பதற்கு இந்தியா தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையிலான நெடுங்கால நட்புறவை நினைவுகூர்ந்த பிரதமர், புதிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை விரிவாக்குவதன் மூலம் இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். அத்தோடு இலங்கை மற்றும் இந்தியா கொண்டிருக்கும் பௌத்த மத ரீதியான தொடர்புகள் இருநாட்டு மக்கள் மத்தியிலும் நெருக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இழப்புக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் இதன்போது இந்தியத் தூதுவர் வெளிப்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# புயலால் பாதித்தோருக்கு இழப்பீடு வழங்கப்படும்

கொழும்பு, மே 29

'அம்பான்' புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க அமைச்சரவை அனுமதித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் வீசிய 'அம்பான்' புயலால் சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட வாழைச் செய்கை மற்றும் பப்பாசிச் செய்கை அழிந்திருந்தது. இதனால் விவசாயிகள் பொருளாதார இழப்பை எதிர்கொண்டிருந்தனர்.

இதுபற்றி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது சுட்டிக்காட்டி இழப்பீடு வழங்க வேண்டும் என்று கோரியிருந்தார். இந்த நிலையில் இழப்பீடு வழங்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது என்று டக்ளஸ் தேவானந்தாவின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (த)

# சமூகத்துக்குள் கொரோனா பரவ அரசு ஒருபோதும் இடமளிக்காது

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, மே 29**

**இலங்கையில் சமூகத்திற்குள் கொரோனா பரவும் நிலை ஏற்படுவதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது; வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக சுகாதாரப் பிரிவுகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளன. வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தீவிரகவனத்துடனும் பொறுப்புணர்வுடனும் கையாளப்படுகின்றனர். வெளிநாடுகளிலிருந்து அழைத்து வரப்படுபவர்கள் கடுமையான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி கையாளப்படுகின்றனர். தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படும்போதும் நோயாளிகள் என உறுதியான பின்னர் மருத்துவமனைக்கு அவர்களைக் கொண்டுசெல்லும்போதும் முழுமையான பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன. வெளிநாட்டிலிருந்து அழைத்து வரப்படுபவர்கள் அனைவருக்கும் மருத்துவ சிகிச்சை வழங்கப்படும் அவர்கள் நோயாளிகள் இல்லை என்றாலும் கிச்சை வழங்கப்படும் அதேவேளை வைரஸ் சமூகத்திற்குள் பரவாத சூழல் உறுதிசெய்யப்படும் - என்றார். (ப)

# இன்றும் மழையுடனான கால நிலை தொடரும்

கொழும்பு, மே 29

நாட்டில் இன்றும் மழையுடனான காலநிலை தொடரும் என்று வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது. "கேகாலை, இரத்தினபுரி, நுவரெலியா, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் சில பகுதிகளில் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழை பெய்யும் வாய்ப்புள்ளது. கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலான கடற்பிராந்தியங்களில் 2.5 முதல் 3 மீற்றர் வரை அலைகள் மேலெழும்பக்கூடும். குறித்த கடற்பிராந்தியங்களில் மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் திடீரென காற்று அதிகரித்து வீசும். அத்துடன் கடும் மழை பெய்வதுடன் கடலும் கொந்தளிப்பாகக் காணப்படும்.

இதனால் ஆழ் கடலுக்குச் செல்லும் மீனவர்களும்,ஆழமற்ற கடற் பிராந்தியங்களில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களும் கடும் அவதானத்துடன் இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


# சொத்து வரி அதிகரிக்கா

கொழும்பு, மே 29

சொத்து வரியை இரண்டு வருடங்களுக்கு அதிகரிக்காமலிருக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பாக சகல ஆளுநருக்கும் அறிவிக்கப்படவுள்ளதாக அமைச்சர்பந்துலகுணவர்த்தன தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வகையில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ப)

# கரைக்கு வந்தது இராட்சதத் திருக்கை



## மீனவருக்கு அதிர்ஷ்டம்

கொழும்பு, மே 29

500 கிலோ எடை கொண்ட பாரிய இராட்சதத் திருக்கை மீன் ஒன்று நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பு பூநொச்சிமுனை மீனவர்களால் பிடிக்கப்பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள பாரிய கடல் கொந்தளிப்புக் காரணமாக குறித்த பாரிய திருக்கை மீன் கடல் அலைகளால் கரைக்கு அடித்து வரப்பட்ட நிலையில் அந்தப் பகுதி மீனவர்கள் அதைப் பிடித்துள்ளனர். இந்த மீன் கரைக்கு பெருமளவு மீனவர்களால் இழுத்து வரப்பட்டு வெட்டப்பட்டு சுமார் ஒரு இலட்சம் ரூபா வரை விற்பனை செய்யப்பட்டதாகவும் இதற்கு மேலதிகமாக அந்த மீனின் பூ மாத்திரம் 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். (ப)

# ஐ.ம.சவுக்கு எதிராக எவரும் நடவடிக்கை எடுக்க முடியாது

## முன்னாள் எம்..பி சுஜீவ சேனசிங்க தெரிவிப்பு



கொழும்பு, மே 29

ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பதற்கான உரிமை எவருக்கும் இல்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக வேறு கட்சிகளில் இணைந்து கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்தநிலையில் அகிலவிராஜ் காரியவசத்தின் கருத்துக்குப் பதிலளிக்கும் போதே சுஜீவ சேனசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் அனுமதியுடனேயே ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கியுள்ளதாகவும், இதன்காரணமாக எவரும்கட்சியின் யாப்பை மீறவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். எவரையாவது இடைநிறுத்தவேண்டும் என்றால் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரையும் கட்சியின் யாப்பு குறித்தும் அறியாதவர்களையுமே இடைநிறுத்தவேண்டும் எனவும் சுஜீவ சேனசிங்க சுட்டிக் காட்டியுள்ளார். (ப)

# கொரோனா தொற்றுக்கு சிகிச்சையளிக்க இரு வைத்தியசாலைகள்

கொழும்பு, மே 29

இனிவரும் காலங்களில் வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பும் இலங்கைப் பணியாளர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பின் அவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மேலும் இரண்டு வைத்தியசாலைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, தெல்தெனிய வைத்தியசாலை மற்றும் ஹம்பாந்தோட்டை பழைய வைத்தியசாலை என்பன கொரோனா தொற்றாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காகத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

தற்போது, குவைத்திலிருந்து வருகைதந்த அனைவரினதும் பரிசோதனைகள் நிறைவடைந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ப)

# அர்ஜன் அலெக்சாண்டராக அர்ஜூன் மகேந்திரன்

## இன்டர்போல் தகவல்

கொழும்பு, மே 29

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடிகள் தொடர்பில் பிரதான சந்தேகநபராக அடையாளப்படுத்தப்பட்டுள்ள மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் தனது பெயரை மாற்றம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அர்ஜூன் மகேந்திரன் தனது பெயரை அர்ஜன் அலெக்சாண்டர் என மாற்றிக் கொண்டுள்ளதாக இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸார் அறிவித்துள்ளதாக ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது. இலங்கையின் குற்ற விசாரணைப் பிரிவில் காணப்படும் இன்டர்போலின் கிளைக் காரியாலயத்திற்கு இது பற்றி அறிவித்துள்ளது. இன்டர்போலின் தேடப்பட்டு வருவோர் பட்டியலில் அர்ஜூன் மகேந்திரனின் புதிய பெயரை உள்ளடக்கி திருத்தங்களைச் செய்யுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அர்ஜூன் மகேந்திரனின் புதியபெயரை உள்ளடக்கிதேடப்பட்டுவருவோர் தொடர்பிலான புதிய ஆவணத்தை இலங்கைக் கிளை அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. புதிய பெயரைப் பயன்படுத்தி அர்ஜூன் மகேந்திரன் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றாரா அல்லது பெயர் மாற்றம் செய்து சிங்கப்பூரிலிருந்து தப்பிச் செல்ல முயற்சிக்கின்றாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என குறித்த ஆங்கில ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ப)

# 31 ரயில்கள் கொழும்புக்கு பயணம்

கொழும்பு, மே 29

பல பிரதேசங்களில் இருந்து இன்றைய தினம் 31 ரயில்கள் கொழும்பு நோக்கிப் பயணித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரயில்வே திணைக்கள அதிகாரி டிலிந்த பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார். அவற்றில் இரு ரயில்கள் பொதுமக்கள் பயணிப்பதற்கென சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. பதுளை மற்றும் கண்டி நகர்களிலேயே இவ்வாறு ரயில்கள் பொது மக்கள் பயணிப்பதற்காக இணைத்து கொள்ளப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டது. (ப)

# தமிழ்க் கூட்டமைப்புடன் மட்டும் பேசவேண்டாம்

## விடுதலைக் கூட்டணி கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 29

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில்அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மாத்திரம் பேச்சு நடத்தாது, ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்தவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் அரவிந்தன் சண்முகராஜா தெரிவித்தார்.

கோண்டாவிலிலுள்ள அவருடைய வீட்டில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அண்மைக்காலத்தில் அரச தரப்பை சந்தித்துப் பேச்சு நடத்தியிருக்கின்றார்கள். பல்வேறு விடயங்களை பேசியிருக்கின்றார்கள். கைதிகள் விடயம் தற்போது அதிகளவாக பேசப்படுகின்றது.

கடந்த காலத்தில் இருந்த அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன், ஆட்சிக்கு வந்தது. அந்த காலகட்டத்தில், நிபந்தனைகளைக் கொடுத்து கோரிக்கைகளை இலகுவாக, நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை இருந்தது. கதைக்க வேண்டியவற்றை கதைக்காமல் விட்டு; இன்று காணாமல் போனோர் மற்றும் அரசியல் கைதிகள் தொடர்பில் கதைக்கவில்லை.

தற்போது தேர்தல் காலம் வருகின்ற காரணத்தால், கதைக்க ஆரம்பித்திருக்கின்றார்கள். பின்னர் அசமந்தப்போக்கை கடைப்பிடிக்கின்றார்கள். அந்த நிலைமை மாறவேண்டும்.

தற்போதுள்ள அரசுடன், எவ்வாறான புரிந்துணர்வுடன் செயற்படுகின்றார்கள் என்பது எமக்குத் தெரியாது. இருந்தாலும்கூட, தமிழ் மக்களின் நலனின் அடிப்படையில் செயற்பட வேண்டும்.

அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டன் மாத்திரமன்றி, ஏனைய தமிழ் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கையாளக்கூடிய வகையில் செயற்பட வேண்டும்.

திரும்பவும், நாட்டை இக்கட்டான சூழ்நிலைக்குள் கொண்டுபோவதென்பது, மிகவும் மோசமான ஓர் அரசியல் என நான் கருதுகின் றேன்.

இனங்களுக்கு இடையில் நல்லுறவை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அரசும், இந்த சந்தர்ப்பங்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மாத்திரமன்றி, ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும், கலந்துரையாட வேண்டும்.

மீள்குடியேற்றம் மற்றும் சிறைகளில் வாடும் கைதிகள் மற்றும் மக்களின் பிரச்சினைகளில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். அத் துடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்ததென்பது பற்றி பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு இலங்கை அரசுக்கு இருக்கின்றது. இந்த விடயங்களில் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்பது எமது வேண்டுகோள்- என்றார். (த-106)


# அறிவித்தல்

## வாடிக்கையாளர் கவனத்திற்கு

எமது நிறுவனத்திற்கு தங்களால் 01.01.2020 – 14.05.2020 இடைப்பட்ட காலப்பகுதியில் திருத்த வேலைக்காக ஒப்படைக்கப்பட்ட கணினி மற்றும் கணினி சார்ந்த பொருள்களை எதிர்வரும் ஒரு வார காலத்திற்குள் பெற்றுக்கொள்ளவும். தவறும் பட்சத்தில் பொருள் களிற்கு நிறுவனம் எந்த வகையிலும் பொறுப்பேற்காது என்பதை மன வருத்தத்துடன் தெரியப்படுத்துகின்றோம். மேலும் இது தொடர் பான மேலதிக விபரங்களிற்கு கீழ் காணும் தொடர்பு இலக்கங் களிற்கு தொடர்பு கொள்ளவும். நிறுவனத்தில் பொருள்களை ஒப்படைக்கும் போது இரு வாரங் களில் பொருள்களை மீளப்பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது எமது நிறுவனத்தின் நடைமுறையாகும்.

NALIN Information Technologies Pvt Ltd
Computers of the North

195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1166 | 077 766 7974



# வலிகாமம் தெற்கு பிரதேசசபை

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குரிய பின்வரும் பாவித்த பொருள்கள் பகிரங்க ஏலத்திற்கு விற்கப்படவுள்ளன

காலம் : 12.06.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி
இடம் : தலைமை அலுவலகம், வலிதெற்கு பிரதேசசபை, **சுன்னாகம்**

பொருள்கள் விவரம்:
இலத்திரனியல் பொருள்கள், வாகன பற்றிகள், உலோகப் பொருள்கள் மின்னியல் பொருள்கள், தளபாடங்கள்

நிபந்தனைகள்:

01. ஏலதாரராக கலந்துகொள்பவர் ரூபா 100.00 (NBT தவிர) மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்தப்பட வேண்டும்.
02. சித்தியடைந்த ஏலத்தாரர் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத்தொகை முழுவதையும் செலுத்திப் பொருள்களை அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.
03. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம் தொலைபேசி இலக்கம் 0212240017

க.தர்சன்
தவிசாளர்,
வலிகாமம் தெற்குபிரதேச சபை,
சுன்னாகம்.



# அகவை அறுபது கண்டிட்ட மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



27.05.2020

**திரு. நாகலிங்கம் வேதநாயகன்**

(ஓய்வுநிலை அரச அதிபர் யாழ் மாவட்டம்)

உள்ளத்தால் மென்மையானவர்
கொள்கையில் உறுதியானவர்
கடமையில் கண்ணானவர்
நேர்மை தவறாதவர்
மக்களின் தேவையறிந்த சேவகன்

கஸ்டங்கள் துன்பங்கள் மலையென குவிந்தும்
துயராது, தளராது சவாலாக ஏற்று
தன்பயணம் தடையின்றி தொடர்ந்தார்
அழுத்தங்கள், அதட்டல்கள் அடிபணியா மனவுறுதி
நேர்மையாய் அரச பணி திடமுடன் நிறைவு செய்தீர்

Congratulations

மக்களுக்கான உம்சேவையை மனதிற்கொண்டு
60ஆவது அகவை நிறைவையும் அரச சேவை ஓய்வையும்
கௌரவித்து வாழ்த்துகிறோம்.
இன்னும் பல்லாண்டு இம்மண்ணில் வாழ்ந்து
மானிடத்திற்காய் சேவையாற்ற இயற்கை உங்களை
ஆசீர்வதிக்க வாழ்த்துகின்றோம்.

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும்**
**சனசமூக நிலையமும்**
**வளர்மதி நிறைவாழ்வகம்**
**சம்பியன் லேன், கொக்குவில்.**




# மர அரிவு ஆலைக்கு தீ வைத்த விசமிகள்

யாழ்ப்பாணம், மே 29

அச்சுவேலி பத்தமேனி பகுதியில் மரம் அரிவு ஆலைக்கு இனந்தெரியாதோர் நேற்றுமுன்தினமிரவு தீ வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மர அரிவு நிலைய உரிமையாளர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# நல்லூர் பிரதேச சபைக்கு ரூ.7.5 மில்லியன் இழப்பு

கொழும்பு, மே 29

ஊரடங்கு காரணமாக நல்லூர் பிரதேச சபைக்கு 7.5 மில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தியாகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபையின் எல்லைக்குள் அதிக வருமானத்தை ஈட்டித்தரும் திருநெல்வேலி சந்தை ஊடாக நாளாந்தம் 66,234 ரூபா என்ற அடிப்படையில் 5 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமானளவில் வருமான இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

ஏனைய வரிகள், சபையின் கடைகள் பூட்டப்பட்டமை என மொத்தமாக எமது சபைக்கு 7.5 மில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து எமது சபையின் எல்லைக்குள் இருக்கும் பொதுச் சந்தைகள் அனைத்தும் திறக்கப்படவுள்ளன.

**7 மணிக்குள் வழங்கவும்**

எமது சபைக்கு எல்லைக்குட்பட்ட அனைத்து சந்தைகளும் காலை 6 மணி தொடக்கம் மாலை 7 மணிவரை திறக்க அனுமதி வழங்கியுள்ளோம். சந்தைகளில் வியாபாரிகள் காலை 6 மணி தொடக்கம் 7 மணிக்குள் தமது உற்பத்தி பொருள்களை வியாபாரிகளிடம் வழங்க வேண்டும். காலை 7 மணியிலிருந்து பொதுமக்கள் தமக்குத் தேவையான பொருள்களை கொள்வனவு செய்யமுடியும்.

**ஒருவழிப் பாதை**

திருநெல்வேலி சந்தை அமைந்துள்ள பலாலிகல்வியங்காடு வீதி காலை 6 மணி தொடக்கம் 12 மணி வரை ஒருவழிப்பாதையாக மாற்றப்பட்டுள்ளது.

சந்தைக்கு வரும் மக்கள் தனியாள் இடைவெளியை பின்பற்ற வேண்டும். முகக்கவசம் அணிய வேண்டும். கைகளை கழுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மக்களின் சுகாதாரம் உரிய வகையில் பேணப்படாது போனால் சந்தை மீண்டும் மூடப்படும். எனவே வியாபாரிகளும் பொதுமக்களும் தனிநபர் சுகாதாரத்தை முறையாகப் பேண வேண்டும்- என்றார். (த)

# கசிப்பு காய்ச்சி விற்றவர் கைது

புங்குடுதீவு 10ஆம் வட்டாரம் கண்ணகிபுரம் பகுதியில் கசிப்பு காய்ச்சி விற்ற நபர் ஒருவர் குறிப்பிட்ட ளவு கசிப்புடனும், உபகரணங்களுடனும் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டார்.

பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் உப பொலிஸ் பரிசோதகர் விவேகானந்தன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் அவர் கைது செய்யப்பட்டு கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிவான் யூட்சன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு 14 நாள்கள் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளார். (ஒ.5)

# முல்லை நிலையத்தில் இருவருக்குத் தொற்று!

முல்லைத்தீவு, மே 29
முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் நேற்றுப் பரிசோதனைக்கு உட்பட்டவர்களில் இருவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது.
நேற்று 48 பேருக்கான பரிசோதனைகள் யாழ் போதனா மருத்துவமனையின் ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்டன. அவர்களில் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்தில் தங்கியிருக்கும் 11 பேரின் மாதிரிகளும் சோதிக்கப்பட்டன. அவற்றில் 2 பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

**நாஹா மருத்துவ நிலையம்**
எலும்புகளில் அதிக வேதனை தரும் வாதம், பாரிசவாதம், முழங்கால் பாதிப்பு, தீர்க்க முடியாத மர்ம புண்கள், அல்சர், குழந்தைப்பேறு சிறப்பு சிகிச்சை.
**077 321 2740**
வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு)
மானிப்பாய்.

**வேலையாள் தேவை**
கட்டட நிர்மாண கம்பனி ஒன்றுக்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய மேசன் மற்றும் உதவியாளர்கள் தேவை.
தொடர்புகளுக்கு:-
**077 862 0392, 076 200 4827**

**வாடகைக்கு தேவை**
யாழ் நகரத்தை அண்மித்த பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு : **071 099 0627**

**வாடகைக்கு**
யாழ் நகருக்கு மிக அண்மிய சூழலில் வண்ணார் பண்ணை வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. 3 படுக்கையறைகள், 2 Hall, Bathroom. மாத வாடகை 25.000 ஒரு வருட முற்பணம் தேவை. வாகன தரிப்பிட வசதி உண்டு.
தொடர்பு: **076 8833 713**
(தரகர் தேவையில்லை) Store ஆகவும் பயன்படுத்தலாம்.

**வேலையாள்கள் தேவை**
யாழ் நகரில் உள்ள அச்சகம் ஒன்றுக்கு கணினி தட்டச்சு மற்றும் CoralDraw இல். தேர்ச்சியுள்ள பணியாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
**077 2824321**

# யாழில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 51 கடற்படையினருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், மே 29
யாழ்ப்பாணம் விடத்தற்பளை தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த கடற்படையினர் 51 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் 300 பேர் வரையில் விடத்தற்பளை இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கான மாதிரிகள் கடந்த 25ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அவை, கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டிருந்தது. பரிசோதனை முடிவுகள் நேற்றுப் புதன்கிழமை மாலை கிடைக்கப் பெற்றன. அதில் 51 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் இன்று காலை சிகிச்சைக்காக வெலிகந்த மற்றும் கொழும்பு மருத்துவமனைக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ.5,159)

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 01 . 1934 — மறைவு 28 . 05 . 2020

### கந்தையா சரவணமுத்து

**(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்- மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.)**

வாகையடி வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சரவணமுத்து (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) நேற்று (28.05. 2020) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கமுத்து தம்பதிகளின் மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, பொன்னையா, தம்பையா, அன்னமுத்து, இளையதம்பி (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராமச்சந்திரன் மற்றும் பரமேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் சரவணபவானந்தன் (பிரான்ஸ்), சர்வானந்தன் (சுவிஸ்), சிவசாந்தி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான சதானந்தன், சிவசக்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயலட்சுமி (பிரான்ஸ்), சிவரஞ்சினி (சுவிஸ்), சிவசீலன் (சுவிஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும், அஜெந்தனா (பிரான்ஸ்), அஸ்வினி (பிரான்ஸ்), அஜித்தா (பிரான்ஸ்), சகானா (சுவிஸ்), அனோஜன் (சுவிஸ்), வினோஜன் (சுவிஸ்), சுவேதா (சுவிஸ்), வர்ஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.**

**தகவல்:
குடும்பத்தினர்
மருமகன் -சு.பரமேஸ்வரன்
(அப்பையா)**

## மரண அறிவித்தல்

**தோற்றம்: 11.06.1960 — மறைவு: 28.05.2020**

### திருமதி இந்திரகுமார் விக்னேஸ்வரி

நீர்வேலி தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திரகுமார் விக்னேஸ்வரி நேற்று (28.05.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதப்பிள்ளை பார்வதியம்மை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் சற்குணலிங்கம் இந்திரகுமாரின் (பணியாளர் இராச டீசல்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சற்குணலிங்கம் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், சி.மகேஸ்வரி, வே.வெற்றிவேல் (இளைப்பாறிய போதனாசிரியர், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்), பா.ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும் ச.நிர்மலாதேவி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான ச.தவமலர், ச.கணேஸ்வரன் மற்றும் ச.புவனேஸ்வரன், பா.சோதிநாயகி (சுவிஸ்), த.லிங்கேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2020) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.**

**தகவல்:
ச.இந்திரகுமார் (கணவர்)
077 9074 205**

## மரண அறிவித்தல்



### இராசரட்ணம் யுவராசா

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரட்ணம் யுவராசா நேற்று (28.05.2020) வியாழக்கிழமை காலமான்ார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரட்ணம் பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கலைமகளின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், யுதர்சினி, யுதர்சன், யுதர்சிகா, சுவர்த்திகா ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர்களான அருணகிரிநாதன், மகேந்திரம், கௌரி அம்மாள் மற்றும் மீராம்பாள் (கனடா), காலஞ்சென்றவர்களான ஸ்ரீரங்கநாதன், ரகுநாதன் மற்றும் விஷ்ணுதேவி (வவுனியா), காலஞ்சென்ற மனோகரன், மற்றும் விவேகானந்தனி (வவுனியா) ஆகியோரின் சகோதரரும், தர்மதேவன், ரதி, ஜெயரஞ்சினி, பங்கையவதனி ஆகியோரின் மைத்துனரும், ஜெனாகரன், செந்தூரன், டிலோஜ் ஆகியோரின் மாமனாரும், பௌஜ் இன் பேரனும், சபாரத்தினம், தர்மலிங்கம், நிர்மலா தேவி, வசந்தகுமாரி, கிருஸ்ணபிள்ளை, ஸ்ரீராம் ஆகியோரின் மைத்துனரும், மாலினி, கிருஸ்ணகுமார், திருச்செல்வம், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் சகலனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2020) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 2.00 மணியளவில் சுருவில் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புளியங்கூடல்.
077 711 8350**

**தகவல்:
குடும்பத்தினர்.**

# ஆறாம் ஆண்டு நினைவுகள்

தோற்றம் 15 . 05 . 1939

மறைவு 04 . 06 . 2014



## திருமதி சறோஜினி துரைசிங்கம்

B.Sc. (Ceylon)

(ஓய்வுபெற்ற இரசாயனவியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் ஆசிரியை யாழ் வேம்படி மற்றும் கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)

திதி: சப்தமி : 29.05.2020

பணிக்குச் செல்லும் பெண்ணை துணைவியாக்கிக் கொண்டால் ஊதியத்தை துரும்புச் சீட்டாக வைத்துக் கொண்டு ஆட்டிப்படைப்பாளே என்று அஞ்சியிருந்த எனக்கு துணைவியாகிய முதல் மாதத்திலிருந்தே சம்பளத்தை அப்படியே ஒரு சதமும் குறையாது என்னிடம் நீங்கள் ஒப்படைத்த பெருந்தன்மையை இன்றும் எண்ணிப் பெருமை கொண்டிருக்கிறேன். நீங்கள் எனக்கு மனைவியாக அமைந்தமை இறைவன் எனக்கு கொடுத்த வரம். அந்தக் களிப்பில் இன்றும் தனிமையை மறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

த.துரைசிங்கம்
588/4, நாவலர் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 02 . 1932

இறப்பு 28 . 05 . 2020



## திருமதி நவமணி வேலுப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

கோப்பாயை பிறப்பிடமாகவும், ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமணி வேலுப்பிள்ளை நேற்று (28.05.2020) வியாழக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைரவநாதன் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைரவநாதன் வேலுப்பிள்ளையின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, தர்மலிங்கம் மற்றும் சிவபாக்கியம், வேதநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலேந்திரா (கனடா), நாகேந்திரா, இராஜேந்திரா (மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்- நல்லூர்), குபேந்திரா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகாலக்ஷ்மி (கனடா), சிவாஜினி, சறோஜினிதேவி (கனடா) ஆகியோரின் அருமை மாமியாரும், தேவகி (கனடா), மகரன் (கனடா), கிஷோர், கானப்பிரியா, பானுஷா (கனடா), பவித்திரா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2020) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.இல: 021 205 8077
077 226 3560

தகவல்:
வே.இராஜேந்திரா (மகன்)
சிவன் வீதி, ஆவரங்கால்,
புத்தூர்.

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 17 . 12 . 1950

இறப்பு 23 . 05 . 2020



## அமரர் வ.சிவச்சந்திரதேவன்

(ஸ்தாபகர், வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம்)

தரணி போற்ற வாழ்ந்தவரே எம்மை
தரணியில் தடம்பதிக்க வைத்த ஆசானே!
விரிந்து கிடக்கும் இவ்வுலகில்
சுருக்கெழுத்து, தட்டெழுத்துதனை - நாம்
சுவார்சியமாக கற்க வழிகாட்டியவரே என்றும்
நம் உயர்வுக்காய் உழைத்த பெருமகனே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி - சாந்தி - சாந்தி

**நீதிமன்றப் பதிவாளர்கள் :**
க.பிருந்தா, ச.சிவபாலினி

**நீதிமன்ற சுருக்கெழுத்தாளர்கள் :**
க.ஜெயந்தி, கு.கேஜினி, ந.லலிதா, க.ராஜேந்திரராணி, ப.மோகனதாஸ், சு.சுபாசினி, றெ.பிரதீபா, க.நிஷாந்தினி, பா.அனுசா, இ.வைதேகி, அ.டெனிஸ்மேரி, சி.ஜெயகவிதா, பா.குகனி, ச.மயூரி, சூ.வசந்தி, ஜி.சங்கீதா, ம.அம்பிகா, ப.நர்மதை, ஐ.ஜெயப்பிரியா, கா.திருஷா, ந.சோபனா.

**நீதிமன்ற தட்டெழுத்தாளர்கள்:**
நி.பிரியதர்சினி, இ.மாலினி, சி.உதயபானு, தெ.கிருபாலினி, பொ.கஜாந்தி, ர. அனுஜா

# மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 10 . 1944

இறப்பு 28 . 05 . 2020



## திருமதி துரைச்சாமி இரத்தினேஸ்வரி

யாழ்ப்பாணம், முள்ளானை, இளவாலையை பிறப்பிடமாக கொண்டவரும், 843/2, திருநகர் வடக்கை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி துரைச்சாமி இரத்தினேஸ்வரி நேற்று (28.05.2020) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைச்சாமியின் அன்பு மனைவியும், அகிலன், நர்மதா (ஆசிரியர், கிளி/இந்து ஆரம்ப வித்தியாலயம்), சங்கீதா (முகாமைத்துவ உதவியாளர் மாகாண விவசாயத் திணைக்களம் - கிளிநொச்சி), துஜிதா, திலிபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிறைசூடி, கண்ணன், ரமேஷ் ஆகியோரின் மாமியாரும், முதல்வன், வேழினி, ஆதித்தன், அருள்மொழி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.05.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

843/2, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி,
077 089 1573

தகவல்:
குடும்பத்தினர்.



# இலஞ்சம் பெற்றமைக்காக அதிகாரிகள் இருவர் கைது

கொழும்பு, மே 29
அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு பிரதேச செயலரும், திட்டப் பணிப்பாளரும் கொழும்பிலிருந்து சென்ற இலஞ்ச ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
வீதிப் புனரமைப்பு ஒன்றை ஒப்பந்தக்காரருக்கு வழங்குவதற்காக 3 இலட்சம் ரூபாவை இலஞ்சமாக கோரிய நிலையில், அது தொடர்பில் ஒப்பந்தக்காரரால் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிடம் முறையிடப்பட்டிருந்தது. நேற்று அந்தப் பணத்தை அவர்கள் பெற்றபோது கையும்மெய்யுமாக சிக்கினார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# 2ஆம் கட்டக் கொடுப்பனவு வழங்குவதில் இழுத்தடிப்பு

## தென்மராட்சி மக்கள் கவலை

**சாவகச்சேரி, மே 29**
**தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் இரண்டாம் கட்ட சமூக நலக் கொடுப்பனவு வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர்.**

கிராம அலுவர் பிரிவுகளில் கடமையாற்றுவோர் இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகளைத் தமக்குத் தெரிந்தவர்களுக்கு வழங்கியுள்ளனர் எனவும் இதனால் தினமும். சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரின் அலுவலகத்துக்கு அலைவதாகவும் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு இதுவரை கிடைக்காத மக்கள் தெரிவித்தனர்.
இது தொடர்பாக பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டபோது
பிரதேசத்தில் நான்கு சமுர்த்தி வங்கிகள் உள்ளன. இந்த வங்கிகளுக்கு. இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக தலா 5 மில்லியன் ரூபா வீதம் மூன்று தடவைகள் சமுர்த்தி திணைக்களத்தால் நிதி அனுப்பப்பட்டுள்ளது. பிரதேசத்தில் சமுர்த்திப் பயனாளிகள். காத்திருப்போர் பட்டியலில் உள்ளோர்கள். வாழ்வாதார உதவிகள் கிடைக்காதோர் மற்றும் மேன்முறையீடுகள் செய்தோர் என 16 ஆயிரத்து 755 பேருக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவாக சுமார் 84 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டக் கொடுப்பனவு நான்கு சமுர்த்தி வங்கிகளுக்கும் தலா 15 மில்லியன் ரூபா வீதம் 60 மில்லியன் ரூபா இதுவரை கிடைத்துள்ளன. இன்னமும் 24 மில்லியன் ரூபா கிடைக்காததால் பலருக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. அரசினால் உரிய தொகை அனுப்பப்பட்டதும் இதுவரை வழங்கப்படாத பயனாளர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படும். வங்கிகளுக்கு கொடுப்பனவு கிடைத்ததும் அறிவிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் என்று பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர். (ப-9)


# தாக்குதலில் இளைஞர் காயம்

சாவகச்சேரி,மே 29
தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மட்டுவில் வடக்கில் இடம்பெற்றுள்ளது.
மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல் குறித்த இளைஞரை தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஐ-9)

**வேலையாள் தேவை**
கொக்குவிலில் இயங்கும் சைவ உணவகத்துக்கு றொட்டி வேலை அனுபவம் உள்ளவர் தேவை.
தொடர்புகளுக்கு:-
**076 000 1695, 077 844 3590**

# மரண அறிவித்தல்

மலர்வு
01 . 02 . 1974



உதிர்வு
27 . 05 . 2020

## செல்வநாயகம் உதயசந்திரன்

**(பனை, தென்னை கூட்டுறவு சங்க கிளை முகாமையாளர்)**

இல.33, ஜெயந்திநகர், கிளிநொச்சியை பிறப்பிடமாகவும், விளாத்தி ஒழுங்கை, சுதுமலை தெற்கு மானிப்பாய், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்வநாயகம் உதயசந்திரன் கடந்த (27.05.2020) புதன்கிழமை காலமானார்.
அன்னார், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் செல்லம்மா தம்பதியரின் அன்பும்கனும், வசந்தாதேவியின் அன்புக் கணவரும், நிலோஜன், வானுஜா ஆகியோரின் தந்தையும், உதயகுமார் (மானிப்பாய்), உமாநந்தினி (வவுனியா), உதயராஜ் (கலைமலர் பழவாணிபம் கிளிநொச்சி), சாந்தகுமார் (சிவகுரு பணிப்பகம்), ராஜினி (கோப்பாய்), கிருஸ்ணவதனி (கிளிநொச்சி), புவிதரன் (கிளிநொச்சி), புஸ்பராசா, கலா, பாபு, ஜெகன், ஜெயம் ஆகியோரின் சகோதரரும், குணசேகரம் (வவுனியா), செல்வரதன் (கோப்பாய்), கஜனி (மானிப்பாய்), சர்மிலா (காங்கேசன்துறை) ஆகியோரின் மைத்துனரும், லோஜினி, லோஜன், நிலோஜிகா, நேஜன், டக்சி, டனா ஆகியோரின் மாம னாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2020) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் (விளாத்தி ஒழுங்கை, சுதுமலை தெற்கு, மானிப்பாய்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**076 108 3897,**
**077 532 8964**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## தொண்டமானுக்கு வவுனியாவில் அஞ்சலி

மறைந்த முன்னாள் அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான ஆறுமுகன் தொண்டமானுக்கு வவுனியாவில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.
சிதம்பரபுரம் ஆர். கே. பவுண்டேசன் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் முக்கியஸ்தர் சிவகாந்தன் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில், அன்னாரது உருவப் படத்துக்கு நினைவுச்சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. பிரதேசசபை உறுப்பினர் சுரேஸ், பழனி முருகன் ஆலயத் தலைவர் மாதவன், கிராம அபிவிருத்திச் சங்க தலைவர்களான மகேந்திரன், செல்வம், பெண்கள் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி மல்லிகா ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (சு-110)

# தொண்டமான் நினைவாக தேசிய பல்கலைக்கழகம்

கொழும்பு,மே 29
மலையகத்தின் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்பதே ஆறுமுகன் தொண்டமானின் பிரதான நோக்கமாக இருந்தது. அவரது கனவை நனவாக்கும் வகையில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி தினத்தில் கொட்டகலை தேசிய பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.
அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் தீர்மானங்களைத் தெரிவித்த அமைச்சரவை ஊடகப்பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளதாவது.
இன ஒற்றுமையைப் பலப்படுத்துவதிலும் தொழிலாளர்களின் உரிமைக்காகவும் அவர்களின் குரலாக செயற்பட்ட தலைவராகவே நாம் அவரைப் பார்த்தோம். அவரை நீண்டகாலமாக எமக்கு தெரியும். புதிய அரசில் அவரிடம் இருந்த ஒரே நோக்கம் நுவரெலியாவில் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதேயாகும்.
அதற்கான நிதி ஒதுக்கீடு அமைச்சரவைப்பத்திரம் அடுத்த வாரம் அமைச்சரவைக்கு கொண்டு வரப்படுகிறது. மலையகக் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்பது அவரது கனவு. எனவே
அவரது மரணம் நிகழ்ந்து முதலாம் ஆண்டு நினைவஞ்சலியின் போது கொட்டகலை தேசிய பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படும்- என்றார். (க)





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.